விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 12 திங்கட்கிழமை (26.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 189

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# இன்று முதல் பணிப்புறக்கணிப்பு; அத்தியாவசிய சேவைகள் இயங்கும்

(யாழ்ப்பாணம்)


யாழ்.குடாநாட்டில் இடம் பெற்று வரும் கொலைச் சம்பவங்கள் மற்றும் இராணுவ நெருக்குவாரங்களைக்கண்டிக்கும் வகையில் இன்றுமுதல் பணிப்புறக் கணிப்பை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் அரச சேவைகள் அனைத்தினதும் பணிகளைப் புறக்கணிக்குமாறும் தொழிற் சங்கக் கூட்டமைப்புக் கேட்டுள்ளது.

க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி பணிப் புறக்கணிப்பு இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் படைத்தரப்பினர் தொடர்ந்தும் கொடூரமான முறையில் குழந்தைகள், சிறுவர், மாணவர்,பெண்கள், முதியோர் என்ற வகையில் படுகொலைகளைப் புரிந்து வருகின்றனர்.

அத்துடன் தமிழ் மக்களின் மனங்களில் நினைந்து பூசிக்கப்படும் மாவீரர் துயிலும் இல்லங்களை அநாகரிகமான முறையில் கோழைத்தனமாகத் தாக்கிச் சேதப்படுத்தியும், அஹிம்சையின் முதலிடமான தியாகி திலீபனின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நயினையில் இன்று கொடியேற்றம்



வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

# நோர்வே இல்லாமல் பேச்சுக்கள் இல்லை

## புலித்தேவன் அறிவிப்பு

(இலண்டன்)



**நோர்வேயின் அனுசரணையை நீக்கிவிட்டு நேரடிப் பேச்சுக்கள் நடத்தும் ஜனாதிபதி மகிந்தவின் திட்டத்தை தாம் முற்றாக நிராகரித்து விட்டதாக விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.**

நோர்வேயின் அனுசரணைப் பணியை விலக்கிவிட்டு அரசும் விடுதலைப்புலிகளும் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தலாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுதலைப்புலிகளின் தலைமைக்குச் செய்தியனுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் பி.பி.ஸியின் சந்தேசிய சிங்கள சேவைக்குப் பேட்டியளித்த விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலப் பணிப்பாளர் புலித்தேவன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கோரிக்கையை விடுதலைப்புலிகளின் தலைமை முற்றாக நிராகரித்துவிட்டதாக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலை (10 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி ஊடாக யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்கு புலிகள் திட்டம்?

### சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

பூநகரி ஊடாகச் சென்று யாழ்ப் பாணத்தைக் கைப்பற்றுவதற்கு விடுதலைப்புலிகள் திட்டமிடுவதாக புலனாய்வுத்துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இதற்கான இராணுவச் செயற்பாடுகளைப் பூநகரியூடாக அதிகரித்திருப்பதுடன் அப்பிரதேசத்திற்கு போர்த் தளபாடங்களையும் நகர்த்தியிருப்பதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பாக கடந்தவாரம் யாழ்ப் பாணத்திற்குச் சென்ற ஊடகவியலாளர்கள் யாழ்.51 வது படைப்பிரிவு அதிகாரி பிரிகேடியர் எல்.பி.ஆர்.மெக்கியிடம் வினவியபோது, பூநகரியிலிருந்து ஒரே தடவையில் மேற்கொள்ளப்படக் கூடிய தாக்குதல்கள் பற்றி படைத்தரப்பினர் கவனம் செலுத்தியிருப்பதாக கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் எமது படையினரை இலக்கு வைத்து மேற்கொள்ளப் (10 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே பணியை நிறுத்தினால் போர் தவிர்க்க முடியாததாகிவிடும்

## சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கண்காணிப்புப்பணிகளை நோர்வே இடைநிறுத்துமாயின் போர்த் தவிர்க்க முடியாததாகிவிடும் என்கின்றார் தமிழ்ச்செல்வன்.

29 ஆம் திகதிய கூட்டத்தில் கண்காணிப்புப் பணிகளை இடைநிறுத்துவதாக நோர்வே தீர்மானிக்குமாயின் அது ஏற்கனவே சிக்கலுக்குள்ளாகியிருக்கும் போர்நிறுத்த உடன்பாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சமிக்ஞையாக இருக்கும். அதனால் நாடு யுத்தத்தில் மூழ்கும். இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நோர்வே அனுசரணையாளரின் கேள்விகளுக்குத் தாம் பதிலளித்துள்ளதாகவும் கண்காணிப்பாளர்களின் பாதுகாப்பிற்கு இராஜதந்திர காப்பீடு வழங்குவதாகவும் கூறினார்.

அனுசரணையாளர்கள் ஆறு மாத கால அவகாசத்தைக் கேட்டிருப்பினும் தமது இயக்கம் ஆரம்பத்தில் ஒரு மாத கால அவகாசத்தையே வழங்கத் தீர்மானித்திருந்த நிலையிலும் நடைமுறையில்ஏற்படக் கூடிய சிக்கல்களை கருத்தில்கொண்டு அதனை நாம் நீடித்திருந்தோம்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளைத் தடை செய்வதற்கு முன்னரே தடையினால் ஏற்படக் கூடிய பின் விளைவுகளை கருத்தில் கொள்ளுமாறு புலிகள் (10 ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜயபுரவில் 5 தமிழர்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஜயபுர பகுதியில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 5 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது குறித்து பொலிஸார் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜயபுர பொலிஸ் நிலையத்துக்கு பின்னால் உள்ள காட்டுப் பகுதியில் ஏழு சந்தேக நபர்கள் நடமாடுவதாக கடந்த வியாழக்கிழமை தகவல் கிடைத்தது.

இதையடுத்து அப்பகுதியில் விசாரணைகளை நடத்திய போது தம்பலகாமம் மற்றும் திருமலை பகுதியைச் சோந்த ஐந்து சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். இருவர் தப்பிவிட்டனர் என்று தெரிவித்துள்ளனர். (கு)

# விளையாட்டுத் துறையை மேம்படுத்த சமூக சேவைகள் அமைச்சர் நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் விளையாட்டுத்துறையின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் விளையாட்டுத்துறை சார்ந்த வீரர்களை ஊக்குவிப்பதற்காகவும், விளையாட்டுக் கழகங்களை முன்னேற்றுவதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகளையும், உதவித் திட்டங்களையும் தான் தற்போது மேற்கொண்டு வருவதாக ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், யாழ்.-கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த 23ஆம் திகதி அமைச்சரை சந்தித்து தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக வருகை தந்திருந்த பெருந்திரளான மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் மேற்படி உபகரணங்களைப் பெறவிரும்பும் விளையாட்டுக் கழகங்களைப் பதிவுசெய்வதற்கானநடவடிக்கைகள் நாளையும் நாளை மறுதினமும் அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் இடம்பெறும் என்றும் தெரிவித்த அமைச்சர், யாழ்.மாவட்ட பாடசாலைகளில் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் செயற்பட்டு வருகின்ற விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகிகள் தங்களது கழகங்களைப் பதிவு செய்து தேவையான உபகரணங்களையும், ஏனைய உதவிகளையும் பெறமுடியும் என்றும் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட ரீதியிலும், தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்கில் செயற்படக்கூடிய வசதிகளைப் படிப்படியாக இவ் விளையாட்டுக் கழகங்களுக்கு வழங்க தான் உத் தேசித்துள்ளதாகவும்கூறினார். (கு)

# பிரபாகரனை ஒரு தீவிரவாதியாக இந்தியா சித்தரிப்பது மிகத் தவறு!

## என்கிறார் இந்திய எழுத்தாளர் கமலாதாஸ்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ஒரு தீவிரவாதியாக இந்தியா சித்தரிப்பது தவறு என இந்திய எழுத்தாளரான கேரளத்தைச் சேர்ந்த கமலாதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் ஆனந்த விகடன் இதழுக்கு அளித்த நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேர்காணலின்போது உங்களுக்குப் பிடித்த தமிழர்என்றுயாரைச் சொல்வீர்கள்? எனக் கேட்ட போது,

'அதிர்ச்சிஅடையாதீர்கள்எனக்கு விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை மிகவும் பிடிக்கும்,'

'இலங்கையில் நான் தங்கியிருந்தபோது அந்த அமைப்புடன் எனக்கு நிறைய பழக்கம் இருந்தது''பிரபாகரனை ஒரு தீவிரவாதியாக இந்தியா சித்தரிப்பது தவறு. விடுதலைப் போராளிகளுக்கும் சுயநலங்களுக்காக போராடும் தீவிரவாதிகளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன.

வன்முறையை விடுதலைப் புலிகள் கையில் எடுத்திருக்கிறார்கள் என்று குற்றம்சாட்டுவதை விட ஏன் எடுத்தார்கள்என்றகாரணத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அது தான் தீர்வுக்கான ஒரே வழி' என்றார் கமலாதாஸ். (கு)

## திருவிழா

தீவகம் வடக்குஊர்காவற்றுறை நாரந்தனை மத்தி புனித பேதுருவானவர் திருவிழா கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணியாளர் பீற்றர் துரைரட்ணம் தலைமையில் கொடிஏற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இத் திருவிழாஎதிர்வரும்29ஆம் திகதி வியாழக்கிழமை காலையில் நடைபெறும். திருவிழாத் திருப்பலி புனிதரின் திருச்சொரூபபவனி ஆசி ஆகியவற்றுடன் நிறைவு பெறுகின்றது. (க-72)

# மரக்கறிகளின் விலைகளில் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொதுசந்தையில் இப்போது மரக்கறிகளின் விலைகளில் பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது. இதனால் பொதுமக்கள் பெரிதும் பயனடைகின்றனர்.

அதேவேளை மரக்கறி உற்பத்தியாளர்கள் பெரும்நஷ்டமடைந்து வருகின்றனர். மரக்கறி செய்கையில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள் கத்தரிக்காயை ஒருகிலோ ஐந்து ரூபாவாக வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

ஆனால் வியாபாரிகள் தமது இலாபங்களையும் வைத்து ஒரு கிலோ கத்தரிக்காயை பத்து ரூபாயாக விற்பனை செய்கின்றனர். இதேபோன்று பயிற்றங்காய், புடலங்காய், வெண்டிக்காய், பூசணிக்காய் போன்றவற்றின் விலையும் குறைந்தே காணப்படுகின்றது.

இது இவ்வாறிக்க உருளைக்கிழக்கு கிலோ எண்பது ரூபாவாகவும் முருங்கைக்காய் கிலோ இருநூறு ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

# அடிப்படை வசதியின்றி சந்திரபுர மக்கள் அவதி!

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள சந்திரபுரம் கிராமத்தில் வாழ்கின்ற மக்களுக்கான போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதிகள் இல்லாமையினால் சிறுவர், பெண்கள் மற்றும் முதியோர் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கிய நிலையில் இருந்து வருகின்றனர்.

சந்திரபுரம் கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் மற்றும் சுன்னாகம் பகுதிகளுக்குச்செல்லவேண்டிஏற்படும் போது நீண்ட தூரங்களை கால் நடையாக நடந்தே தமது பயணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையுள்ளது.

இதேசமயம் சந்திரபுரத்திலுள்ள பிரதான வீதி புனரமைக்கப்படாமையினால் பாதசாரிகளும் துவிச்சக்கரவண்டி ஓட்டுனர்களும் அன்றாடம் பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளனர்.

சந்திரபுரம் கிராமத்துக்கு காலை, மாலைவேளைகளில்பஸ் சேவையை நடத்தினால் பொது மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என நம்பப்படுகின்றது. (க-16)

# இராசி பலன்

**26.06.2006**
**(ஆனி 12, திங்கட்கிழமை)**
**பிரதமை முன்னிரவு 10.22 மணிவரை**
**திருவாதிரை பிற்பகல் 5.04 மணிவரை**
**இராகுகாலம் 7.25-8.55மணிவரை**
**சுபநேரம் 11.55-1.25 மணிவரை**
**சித்தாமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், உறவினா வருகை, பொருள்சேர்க்கை, பெருமையடைதல் |
| இடபம் | கடினவார்த்தை, மனோ சங்கடம், அதிக செலவு, முயற்சி தாமதம். |
| மிதுனம் | வெகுமானம், சயனசுகம், மாதர் நட்பு, தொழில் சிந்தை. |
| கடகம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், தனவிரயம், திடீர் பயணம். |
| சிங்கம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தன தானிய சேர்க்கை, நண்பர்கள் வருகை, ஆனந்தம். |
| கன்னி | பிரபுத்தனம், நன்கொடை, எடுத்த காரியம் கைகூடும், ஆரோக்கியம். |
| துலாம் | நிர்ப்பந்த நிலை, சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | பொருள்விரயம், முழங்கால் வலி, காரிய தடங்கல், கலகம். |
| தனுசு | சௌபாக்கியம், தனலாபம், காரிய அனுகூலம், போசனசுகம். |
| மகரம் | மனமகிழ்ச்சி, ஆரோக்கியம், தடைப்பட்ட காரியம் கைகூடும், நல்ல செய்தி. |
| கும்பம் | காரிய இடையூறு, அஜீரண ரோகம், மனக்கவலை, சொத்துக்களால் நன்மை. |
| மீனம் | மனச்சஞ்சலம், ரோகநிலை, தனவிரயம், காரிய தாமதம். |

- வளவன்

# விவசாயிகளுக்கு விரைவில் உரமானியம் வழங்கப்படும்!

## விவசாய அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

மரக்கறி மற்றும் தென்னை உற்பத்தி பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விரைவில் உரமானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நுவரெலிய சாந்திபுர பிரதேசத்தில் ஏற்றுமதிக்கான மரக்கறிகளை கொள்வனவு செய்யும் நிலையமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்,

'மஹிந்த சிந்தனை' யின் அடிப்படையில் இந்நாட்டு மரக்கறி வகைகளை ஏற்றுமதி செய்யும் வேலைத் திட்டத்திற்கிணங்க இலங்கை மரக்கறி வகைகளுக்கு தற்சமயம் மாலைதீவு, மலேசியா, டுபாய் ஆகிய நாடுகளில் அதிக கேள்வியுண்டு.

இந்த நாடுகள் பெருமளவில் மரக்கறி வகைகளை கொள்வனவு செய்ய இணங்கியுள்ளன. தற்சமயம் இலங்கையிலிருந்து கரட், பீட்ரூட், லீக்ஸ், சலாது, கோவா, கறிமிளகாய் முதலான மரக்கறி வகைகள் மாதமொன்றுக்கு சுமார் 20 ஆயிரம் கிலோ ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இத்தொகை மூன்று மெட்ரிக் தொன்னாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நெற் செய்கையாளர்களுக்கு மட்டும் உரமானியங்களை வழங்க வேண்டும் என எண்ணங் கொள்ளவில்லை. முதற் கட்டமாக நெற்பயிர்ச் செய்கைக்கு உர மானியம் வழங்கி பின்னர் படிப்படியாக ஏனைய பயிர்ச்செய்கைகளுக்கும் வழங்கவும் நாட்டம் கொண்டுள்ளார்.

இதனடிப்படையிலேயே மரக்கறி மற்றும் தென்னை உற்பத்திக்கு உர மானியங்கள் வழங்கப்படவுள்ளன. இதேசமயம் இரசாயன செயற்கை உரப் பாவனைகளால் அப்பகுதிகளிலுள்ள குடிநீர் கிணறுகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் மாற்றம் காண இரசாயன உர பாவனையைக் குறைத்து இயற்கை உர பாவனையை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். இந்நிகழ்வில் அமைச்சர் டக்களஸ் தேவானந்தாவின் பிரத்தியேக செயலாளர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம், விவசாய அபிவிருத்தி அமைச்சின்-ஆலோசகர் கலாநிதி செரி ஜயவர்த்தன உட்பட மற்றும் பலரும் கலந்துகொண்டனர். (க-7)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் 225 பேருக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வடகிழக்கில் இன்னும் இரு வாரங்களுள் 225 பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நிரந்தர நியமனத்தைப் பெறவிருக்கிறார்கள். இதற்கான அங்கீகாரத்தை கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகே வடகிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்திற்கு கடந்த வியாழக்கிழமை வழங்கியுள்ளார்.

01.07.2005இல் 180 நாட்கள் தொடர்ச்சியாக சேவையாற்றிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கே இந் நிரந்தர நியமனம் கிடைக்கவிருக்கிறது. தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம், வட கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரிய சங்க செயலாளர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் இணைந்து விடுத்த பத்திரிகைச் செய்தியில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. (க-7)


அருள் மிகு சுன்னாகம் மயிலணி
கந்த சுவாமி கோவில் மஹோற்சவம்



6 ஆம் நாள் 26.06.2006
(கப்பல் திருவிழா)



பழமான பரமகுருவே

நினைப்பார்கள் நெஞ்சில் நிலையாக நின்று
நெறிகாட்டும் நீல மயிலோய்!
தினைகாத்த வள்ளி தனைக் காத்துக் கொண்டு
செகம் காக்கும் சேவற்கொடியோய்!
பனையோலை பாடும் மயிலூரில் வைகும்
பழமான பரம குருவே!
வினைதீர்த்து மக்கள் மிடி தீர்த்து வெற்றி
வழிகாட்டி வேல்விட்டருளே.

சிற்பி

கந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு

**செல்வ நாகபூசணி அம்பாள்**

**திருக்கோவில்**

**ஆனி மஹோற்சவ விஞ்ஞாபனம்**

அம்பிகை அடியார்களே!

அம்பாளின் மஹோற்சவத் திருவிழா 26.06.2006 திங்கட்கிழமை விய வருடம் ஆனித் திங்கள் 12ஆம் நாள் காலை 9.10 மணிக்கிடையிலான நேரத்தில் கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் காலை-மாலை திருவிழாக்களும் தினமும் காலை-மாலை அபிஷேகங்களும் நடைபெறும்.

25.06.2006 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொடிச் சீலை கொண்டு வருதலும் சாந்தி கிரிகைகளும் நடைபெறும்
26.06.2006 திங்கட்கிழமை காலை 9-10 மணிக்கிடையில் கொடியேற்றம்
09.07.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா
10.07.2006 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழா கொடி இறக்கம் மாலை 4 மணிக்கு
11.07.2006 கப்பல் திருவிழா
12.07.2006 வைரவர் பூசை

*கொடியேற்றம்:*
*ஆலய பிரதம குரு*
**கிரிஜாலங்காரமணி சிவஸ்ரீ ரவீந்திரராஜா குருக்கள்**
**கோண்டாவில்**

சுபம்
இங்ஙனம்
திருவிழா உபயகாரர்களும், அம்பாளின் அடியார்களும், ஆலய தர்ம கர்த்தாவும் (457)


## கணனி மயப்படுத்தப்பட்ட அடையாள அட்டைகள்

நாட்டில் கணனி மயப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்க ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் ஒன்று நேற்று முன்தினம் பொதுநிர்வாக அமைச்சில் மேற்கொள்ளப்பட்டது. நாட்டில் தேசிய அடையாள அட்டைகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. இதனால் மனித வலுவைப் பயன்படுத்தி அடையாள அட்டைகளை விநியோகிக்க முடியாது.

எனவே கணனி மயப்படுத்தப்பட்ட அட்டைகளை விநியோகிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை இந்த அடையாள அட்டைகளில் பல முக்கிய தரவுகளையும் உள்ளடக்க ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. (க-9)

## 223 பேருக்கு டெங்கு நோய்

கண்டி மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தற்சமயம் சுமார் 223 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். இதில் ஜட்டிநுவர பிரதேசத்தில் 40 பேரும், உடுத்துர பிரதேசத்தில் 31 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (க-9)

# பல்கலைக்கழக வளாகத்துக்குள் படையினர்;

## ஈழவேந்தன் எம்.பி கடும் கண்டனம்!

ஈழத்தமிழினத்தின் எதிர்காலத்தை ஏக்கமுறச் செய்யும் முறையில் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து உருவாகும் தலைவர்களை தொடர்ந்து இராணுவம் அச்சுறுத்திவருகிறது என்றும் இதனைத் தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் மா.க. ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அழிவின் விழிம்பில் இருக்கும் தமிழினத்தைக் காக்க தம் உயிரைத் துச்சமென மதித்துப் போராடி இறப்பை இறுகணைத்த மாவீரர்களின் துயிலும் இல்லங்களையும் இராணுவம் தாக்குவது தமிழர் இறப்பிலும் அமைதிகாண முடியாது என்பதையே எடுத்துக்காட்டுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

20.06.2006 இல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தையும் பின்பு 21.06.2006 இல் வடமராட்சி எள்ளான்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தையும் படையினர் சேதப்படுத்தியுள்ளனர். அடுத்து 22.06.2006 இல் அண்ணல் காந்தியையும் மிஞ்சுகின்ற அளவிற்கு அறவழிப் போராட்டத்தை நடாத்தி அகிலத்தைக் கவர்ந்த தியாகத்தின் வடிவம் திலீபனின் திருவுருவப் படத்தையும் தாக்கி சுக்கு நூறாக்கியுள்ளனர். இது போன்றே அதே நாளில் தீவகத்தில் சாட்டியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லக் கட்டடங்களையும் மின் குமிழ்களையும் அடித்து நொருக்கி கடற்படை அட்டகாசம் செய்துள்ளது.

இதைத் தவிர பல்கலைக்கழகத்தினுள் படையினர் உள் நுழைவதற்கு இலங்கை கல்வி சார் சட்டத்தின்படி அனுமதி இல்லை. ஆனால் நிலவுகின்ற சட்டத்தையே முற்றாகப் புறக்கணித்து தூக்கி எறிந்த நிலையில் படையினரின் நடவடிக்கை தலை தூக்கியுள்ளது. இதனால் தான் நீண்டகாலமாக பல்கலைக்கழகம் முறையாக இயங்க முடியாத நிலை நிலவியது.

பின்பு தமிழ் மக்களிடையே உணர்வுகளை, வேட்கைகளை முற்றாக மதிக்காத பேராசிரியர் கூல் என்பவரை யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக திணிக்க முயன்று அரசு முழுத் தோல்விகண்டது. தாமடைந்த தோல்வியை மூடிமறைக்க இத்தகைய செயலில் மஹிந்த அரசும் அவ் அரசின் இராணுவமும் ஈடுபடுகின்றதோ நாம் அறியோம். காரணம் எதுவாக இருந்தாலும் தமிழ் மக்களுடைய கல்வி நிலை தொடர்ந்தும் பாதிக்கப்படுவதை நாம் மேலும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.

இப்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு புதிய துணைவேந்தராக முனைவர் குமாரவடிவேல் பதவியேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மீண்டும் சீர்பெற அல்லும் பகலும் உழைக்கையில் சிங்கள இராணுவம் மீண்டும் தலைவிரித்து தாண்டவம் ஆடுவதை நாம் ஏற்க முடியாது.

எனவே ஈழத்தமிழ் மக்களின் எதிர்கால மையமாக விளங்கும் யாழ்.பல்கலைக்கழகம் தன் பணியினை ஏற்றமுற நிறைவேற்ற நாம் விழிப்புடன் பணியாற்ற வேண்டும். அதே வேளையில் தமிழினம் தமிழீழம் காண விதைக்கப்பட்டவர்கள் தான் எம் மாவீரர்கள். அவர்கள் விதைக்கப்பட்டவர்களோ அன்றி புதைக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களின் அமைதியான துயிலுக்கு ஆபத்து ஏற்படுத்த அரசும் அவர்களின் முப்படையும் முயலுமாயின் நாம் அவ் வெறிச் செயலை எப்படியும் முறியடித்தே தீருவோம். இதுவே நாம் அரசுக்கு விடுக்கின்ற அறைகூவலாகும். ஈழத்தமிழ் மக்களுடைய அழிவையொட்டி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் இயங்குகின்ற உலக நாடுகள் இனிமேலாவது உண்மை நிலையை உணர்ந்து ஈழத்தமிழ் மக்களின் அரசியல் வேட்கைகளை மதித்து எம்மினம் விடுதலையும் விடிவும் காண துணைநிற்க வேண்டும் என்றும் வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது. (க)

# தனியார் வைத்தியசாலைகளில் 25000 போலி மருத்துவர்கள்

(கொழும்பு)

நாடுமுழுவதிலுமுள்ள தனியார் வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ நிலையங்களில் 25 ஆயிரம் போலி மருத்துவர்கள் கடமையாற்றுகின்றார்கள் என தெரிய வந்துள்ளது.

சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் தனியார் மருத்துவ நிலையங்கள் பிரிவுக்குப் பொறுப்பாக இருக்கும் பணிப்பாளர் விடுத்த அறிக்கை ஒன்றில் இந்த வைத்தியர்கள் போலியான சான்றிதழ்களை சமர்ப்பித்து தொழில் புரிகின்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தவறிழைக்கும் மருத்துவர்களை இனம் காணுவதற்கும் தனியார் மருத்துவ சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்குமென தனியார் மருத்துவ நிலையங்களை பதிவுசெய்யும் உடனடி திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் மருத்துவ சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் நாட்டில் ஏறத்தாழ 200 தனியார் வைத்தியசாலைகள் செயற்படுகின்றன. இவைதவிர நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 450 பரிசோதனைக் கூடங்களும் 12 ஆயிரம் மருத்துவ நிலையங்களும் செயற்பட்டு வருகின்றன என்றும் அவர் அறிக்கையில் சுட்டிக்காட்டினார். (க-9)


**மணி பல்லவத்தில் மஹோற்சவம்**



**நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை**

**இன்று கொடியேற்றம்**

**ஏழுகடல் நாயகியே கொடியேறு**

ஐந்து தலை நாகங்கள் உன்னைச் சூழ
அவை நஞ்சை அடக்கி யுயர் நிழலாய் ஆக்கிய
நயினையுறை நாகம்மாளே கொடியேறு
ஏழுகடல் நாயகியே கொடியேறு
மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ கொடியேறு
அமுத சுரபி அன்னதானம் வழங்கும்
நயினையுறை நாகம்மாளே கொடியேறு

*சின்கந்தையா*

**நயினையிலே கொடியேற்று நாகபூஷணி**

நயினைநகர் உறைபவளே நாகபூஷணி
நாடும்வரம் தருபவளே நாகபூஷணி
வினைகளையும் வித்தகியே நாகபூஷணி
வேண்டும்வரம் அளிப்பவளே நாகபூஷணி
உனைநம்பி வாழ்பவர்க்கு நாகபூஷணி
உற்றதுணை இருப்பவளே நாகபூஷணி
அலைகடலின் ஓரத்திலே நாகபூஷணி
அற்புதமாய் கொடியேற்று நாகபூஷணி

*அ.கலாநிதி*

**எழிலார்ந்த நாயகியே ஏற்றுந்தன் கொடியை**

நயினைநகர் உறைபவளே ஏற்றுந்தன் கொடியை
நாடிவரும் சமாதானம் மலரவே ஏற்றுந்தன் கொடியை
தொல்லை துயர் தீர்த்திடவே ஏற்றுந்தன் கொடியை
தொல்லறங்கள் காத்திடவே ஏற்றுந்தன் கொடியை
அல்லல்களைப் போக்கிடவே ஏற்றுந்தன் கொடியை
அன்பர்களை அரவணைத்தே ஏற்றுந்தன் கொடியை
நல்லறங்கள் வளர்ப்பவளே ஏற்றுந்தன் கொடியை
நலமான வாழ்வதனைச் சேர்த்திடவே ஏற்றுந்தன் கொடியை

*மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்*

**துன்பங்களை நீக்க கொடியேறு**

நயினை யுறை வாழ் நாகபூஷணியே கொடியேறு
நாட்டில் நிலவும் துன்பங்களை யோட்டிட நாகபூஷணியே கொடியேறு
நின் பாதம் சரணடைந்து இசைவாட நாகபூஷணியே கொடியேறு
நீதி உண்மை தன்னில் ஒன்றி நிம்மதியாய் வாழ நாகபூஷணியே கொடியேறு
என்றும் எம்மை இன்பமாக வாழவைக்கும் நாகபூஷணியே கொடியேறு
ஏற்றம் தந்து அன்னதானம் வழங்கும் நாகபுஷணியே கொடியேறு
ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றிடமென்ற தத்துவத்தை உணர்த்திய நாகபுஷணியே கொடியேறு
ஓங்கார நாயகியே! உத்தமியே! உலகில் சமாதானத்தை பரப்பிட அன்னை நாகபூஷணியே கொடியேறு

*க.செவ்வந்தியம்மா*

**நயினைத் தாய்நீ! சமாதானி காப்பாயேநீ!**

விண்ணை மண்ணையும் வில்லாய் வளைக்கும்
கன்னி கைலாசதேவிநீயே கலைநீ தாய்நீ - விண்சக்தி
நயினைநீ நாகபூசணிநீவா நல்லநீ அருளாட்சிநீ
நயினைச் சமாதானி காப்பாயே

நல்லூர் சிவமுருகன் என்.தமிழ்மகன்

## இன்று ஒரு தகவல்

# அடிமைகள்

அலுவலகப் பணியாளர்கள் சிலரைப் பாருங்கள். எப்போது பார்த்தாலும் வேலை...வேலை என்று அங்குமிங்கும் ஓடிக்கொண்டே இருப்பார்கள்... பார்த்தால் அவர்களின் வாழ்வையே அந்த வேலைக்கு அர்ப்பணித்துவிட்டது போல் தெரியும். உண்மையில் அது ஒரு போதைக் கோளாறு என்கின்றனர் உளவியல் நிபுணர்கள்.

'வேலை போதை' என்று அதற்குப் பெயரிட்டுள்ளனர். தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட போதைகளில் இதுவும் ஒன்று என்கிறார்கள் அவர்கள். இப்படி ஓடியாடிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்துவிட்டு மற்றவர்கள் தவறாகப் புரிந்துகொள்கிறார்களாம். சார் நல்ல திறமைசாலி.. கடினமாக உழைக்கக் கூடிய சாமர்த்தியம் உள்ளவர் என்று நினைத்து விடுகிறார்கள். சாருக்கு தொழில் மீது அவ்வளவு மதிப்பு, பக்தி என்றெல்லாம் அதற்கு புறச்சாயம் பூசி விடுவார்கள். ஆனால் உண்மையில் அது ஒரு போதைக் கோளாறு. இதுதான் உளவியல் நிபுணர்களின் முடிவு.

சரி இந்தக் கோளாறு உள்ளவர்கள் ஏன் இப்படி வேலை வேலை என்று அலைகின்றனர் தெரியுமா? தாங்கமுடியாத குற்ற உணர்வு, இயலாமை, தாழ்வு மனப்பான்மை, பாதுகாப்பு இன்மை இதையெல்லாம் மூடிமறைக்கத்தான் அப்படி நடந்துகொள்கிறார்களாம். இதனால் என்ன ஆகிறது? அதிக உழைப்பு, அதிக சாதனைகளை உருவாக்க வேண்டும் என்ற தணியாத தாகம், தனது தேவைகளுக்காக தன்னை வருத்துவது இதெல்லாம் அதோடு சேர்ந்து கொள்கிறது.

அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் மட்டும் தான் என்றில்லை. பல தனிப்பட்ட மனிதர்கள், நிர்வாகிகள், விற்பனையாளர்கள், குடும்பத் தலைவிகள், பள்ளி செல்லும் பிள்ளைகள் இவர்களும்கூட வேலை போதை அடிமைத்தனத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதற்கான நோய் அறிகுறிகளை அவர்களிடம் பார்க்க முடிகிறதாம்.

ஆனால் ஒன்று இப்படிப்பட்டவர்களுக்கு அலுவலகங்களில் மேலதிகாரிகளிடம் நல்லபெயர் கிடைக்கும். மாணவர்களுக்கு பாராட்டும், பரிசும் கிடைக்கும். வகுப்பில் மதிப்பெண்கள் உயரும். அலுவலகத்தில் சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கும். அந்த வகையில் அவர்கள் சாதனையாளர்கள்தான். ஆனாலும் மருத்துவர்கள் அவர்களைப் பார்க்கும் பார்வை வேறு. என்ன சொல்கிறார்கள் தெரியுமா? அவர்களைப் பற்றி "இவர்கள் தங்கள் மீது கொள்ளும் அக்கறை குறித்த எதிர்மன உணர்வுகளின் பழக்கம் போதையர்கள், அடிமைகள்" என்கின்றார்கள்.

பிறரைச் சார்ந்து வாழ்தல் என்று சொல்கிறோமே அதுவும் ஒரு போதை அடிமைத்தனமாம். ஆனால் இதற்கான அறிகுறிகள் வேறுமாதிரி இருக்கும். பிறரைச் சார்ந்து வாழும் மனிதர்கள் பாதுகாப்பு உணர்வு பற்றிய இயல்புக்கு மாறான விறைப்பு நிலையில் இருப்பார்கள்.ஆக்கிரமிப்பு மனப்பான்மைகளையும், பிறரின் வாழ்வில் ஒவ்வொரு காட்சியையும் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள்.

பிறரைச் சார்ந்து ஒட்டிவாழ்வதில் இருந்து வெளியேறவோ, பிரித்துக்கொள்ளவோ இவர்களால் முடியாது. எங்கும் எவரிடத்திலும் அதிகாரம் செலுத்த முற்படுவதை இவர்களால் கட்டுப்படுத்த முடியாது. இதுவும் ஒரு வகை போதை அல்லது அடிமைத்தனம் என்கிறார்கள் நிபுணர்கள். வாழ்வை உள்ளபடியே எதிர்கொள்ள இயலாமையின் விளைவுதான் பொதுவாகப் பல கோளாறுகளுக்கும் காரணம்.

ஒரு சிக்கல் குறித்து தனது இயலாமையை ஒப்புக் கொள்ளும் போது அடிமைத்தனத்திலிருந்து மீட்சி கிடைக்கும். அப்படிப்பட்ட ஒரு விடுதலைதான் இன்று பலருக்குத் தேவைப்படுகிறது.

அலுவலகப் பணியாளர் ஒருவருக்குத் திடீரென்று சுகயீனம். மருத்துவ விடுப்பு எடுத்துக்கொண்டு மருத்துவமனையில் படுத்திருந்தார். அலுவலகத்தில் இருந்த சக ஊழியர்கள் சேர்ந்து போய் அவரைப் பார்த்தார்கள். இவர்களைப் பார்த்ததும் அவர் ஓ...வென்று கண்ணீர்விட்டு அழ ஆரம்பித்துவிட்டார். "அழாதீர்கள் சார்... விரைவில் குணமாகிவிடுவீர்கள்" என்று ஆறுதல் சொன்னார்கள்.

"நான் என் உடல் நிலையைப் பற்றி எண்ணி அழவில்லை. அலுவலகத்தில் நான் பார்த்துக் கொண்டிருந்த வேலையெல்லாம் அப்படி அப்படியே கிடக்குமே அதை நினைத்து அழுகிறேன்" என்றார். இவர் இப்படிச் சொன்னவுடன் வந்தவர்கள் அழ ஆரம்பித்துவிட்டார்கள்.

"நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார் இவர். "அலுவலகத்தில் உங்கள் வேலை எதுவாக இருந்தாலும் அதை செய்து முடிக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஆனால் இதுவரை நீங்கள் அலுவலகத்தில் என்ன வேலை செய்துகொண்டிருந்தீர்கள் என்பது எங்கள் யாருக்கும் புரியவில்லை. அது தான் அழுகிறோம்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தொலைக்காட்சி நிறுவன நிர்வாகிகளுடன் மின்சக்தி அமைச்சர் கலந்துரையாடுவார்

(கொழும்பு)

தேசிய மின்சார சேமிப்புத் திட்டத்தின் கீழ் இரவு பத்து மணிக்குப் பின் தொலைக்காட்சி சேவைகளை நிறுத்துவது தொடர்பாக தொலைக்காட்சி நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் பேச்சு நடாத்துவதற்கு மின்சக்தி, எரிசக்தி அமைச் சர் ஜோன் செனவிரத்ன தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று இன்று தகவல் திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது.

மின்சக்தி , எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரத்ன இச்சந்திப்பின் போது தேசிய மின்சார சேமிப்புத் திட்டத்துக்கு தமது பங்களிப்புக்களை பெற்றுத் தருமாறு தொலைக் காட்சி நிறுவன நிர்வாகிகளிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளார்.

தொலைக்காட்சி நிறுவன நிர்வாகிகளின் ஆலோசனைகளை கருத்திலெடுத்ததன் பின்பே இரவு பத்து மணிக்குப் பின் தொலைக்காட்சி சேவைகளை நிறுத்துவதா? இல்லையா? என்ற இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மின்சக்தி, எரிசக்தி அமைச்சில் அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் மாநாட்டின் போது இரவு பத்து மணிக்கு பின் தொலைக்காட்சி சேவைகளை நிறுத்துவது பற்றி தெரிவிக்கப்பட்டது.

இதன்பின் சேவைகளைத் தொடர விரும்பும் தொலைக்காட்சி நிறுவனங்களிலிருந்து பத்து இலட்சம் ரூபாவினை மேலதிக கட்டணமாக அறவிடுவதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. (க-7)

# 170 நீர் விசிறியடிக்கும் உபகரணங்களை சீன அரசு இலங்கைக்கு வழங்கியது!

(கொழும்பு)

இலங்கையின் உலர் வலயத்திலுள்ள விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 70 மில்லியன் ரூபா பெறுமதியான 170 நீர் விசிறியடிக்கும் உபகரணங்களை சீன அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் சன்கிளக்சியன்ங் இந்த உபகரணங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அலரி மாளிகையில் வைத்து உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

நீரை விசிறியடிக்கும் உபகரணங்களை இலங்கைக்கு வழங்குவது தொடர்பான ஒப்பந்தமொன்றும் அலரிமாளிகையில் கைச்சாத்திடப்பட்டது. சீனத் தூதுவர் கிளக்சியன்ங்சும் அமைச்சர் அமீர் அலியும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஜனாதிபதிக்கு இந்த உபகரணங்களை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வில் சீனத் தூதரக உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர். (க-7)

# திருமணப் பதிவுக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

திருமணப் பதிவிற்காக பதிவாளர்கள் அறவிடும் கட்டணங்களை அதிகரிப்பதற்கு பதிவாளர் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

திருமணப் பதிவாளர்களின் வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பதிவா ளர் நாயகம் எல்.சே.ரத்தினசிறி தெரிவித்துள்ளார்.

பதிவாளர் அலுவலகத்திலிருந்து வெளியில் சென்று திருமணப் பதிவுகளை செய்வதற்கான கட்டணத்தை ஆயிரம் ரூபாவாக நிர்ணயிப்பதற்கு ஆலோசித்து வருவதாகவும் பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதனை முன்னிட்டு திருமணப்பதிவு கட்டளைச் சட்டம் திருத்தியமைக்கப்படவுள்ளது. திருமணப் பதிவாளர்களினால் அறவிடப்படும் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான உத்தேச யோசனையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த மாதத்திற்குள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படுமென்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, திருமணப் பதிவு அலுவலகங்களில் இடம்பெறும் திருமணப் பதிவுக்கான கட்டணமும் திருத்தியமைக்கப்படவுள்ளது. (க-9)

# தேசிய வருமான வரித் திணைக்களத்துக்கு 1136 பட்டதாரிகளை நியமிக்க நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய வருமான வரித் திணைக்களத்துக்கு இவ் வருடம் முடிவடைவதற்கு முன்பதாக ஆயிரத்து 136 பட்டதாரிகளை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள் ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அலரிமாளிகையில் இடம்பெற்ற தேசிய வருமானத் திணைக்களத்தின் கடந்த ஆறுமாதங்களுக்கான முன்னேற்றம் குறித்து ஆராயும் கூட்டத்தின் போதே இது குறித்து தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் திறைசேரி செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தர, பிரதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

2002ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட வரி மன்னிப்பு சட்டமூலத்தினால் அரசாங்கத்திற்கு 41 பில்லியன் ரூபா கிடைக்காமல் போயுள்ளமை தொடர்பாகவும் மேற்படி கூட்டத்தில் ஆராயப்பட்டது.

வரி வருமானங்களை ஒழுங்கான முறையில் சேகரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி கூட்டத்தில் தெரிவித்தார்.

அத்துடன் கொழும்பில் மேலும் இரு கிளை அலுவலகங்களை அமைப்பது குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

வரி செலுத்துபவர்கள் அவற்றை ஆர்வத்துடன் செலுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த வேண்டியது அவசியமென்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன் இவ் வருடத்திற்கான வருமானவரி 260 பில்லியன் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (க-7)

# மின்னல் ஏற்படும் நேரத்தில் செல்போன் பாவிப்பது ஆபத்து!

(பாரிஸ்)

புயல் மழை காலங்களில் மின்னல் மின்னிக் கொண்டிருக்கும் பொழுது, வெட்டவெளியில் நின்று செல்போன்களைப் பயன்படுத்துவது உயிருக்கே கூட ஆபத்தாக முடிந்துவிடக்கூடும் என்று ஓர் ஆய்வில் தெரியவந்துள்ளது.

பிரிட்டனில் வெளியாகும் மருத்துவ இதழில் இது தொடர்பான விவரங்கள் வெளியாகியுள்ளன. பிரிட்டனில் வாழும் இந்திய டாக்டர்கள் பிரசாத் கோத்தாரி, ராம் தில்லான் மற்றும் டாக்டர் ஸ்விண்டா இஸ்பிரித் ஆகியோர் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

லண்டனில் உள்ள நார்த்விக் பார்க் மருத்துவமனையில் அவர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் இது குறித்து கருத்துக் கூறுகையில்,

புயல் மழை நேரத்தில் நகரத்தில் உள்ள பெரிய பூங்கா ஒன்றில் 15 வயதுச் சிறுமி ஒருத்தி , செல்போனில் பேசிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது திடீரென்று மின்னல் ஏற்பட்டது. அந்த மின்னல் அவரது செல்போன் மூலம் அவரது உடலைத் தாக்கியது. அதனால் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. உடனடியாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதால் உயிர் பிழைத்துக் கொண்டார்.

ஆனால் அவரது உடல் பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலியிலேயே இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அவரது நினைவாற்றல் பாதிக்கப்பட்டுவிட்டது; மனத்தின் சமநிலையும் பாதிக்கப்பட்டுவிட்டது. அதோடு, அவர் எந்தக் காதில் வைத்து செல்போனில் பேசிக்கொண்டிருந்தாரோ, அக்காதின் செவிப்பறையும் சேதமடைந்துவிட்டது.

செல்போனில் பேசிக்கொண்டிருக்கும் பொழுது மின்னல் தாக்கி 3 பேர் பலியான சம்பவங்கள் பற்றிய செய்திகளும் வெளியாகியுள்ளன. 2005ஆம் ஆண்டில் சீனாவிலும், 2004ஆம் ஆண்டில் தென்கொரியாவிலும், 1999ஆம் ஆண்டில் மலேசியாவிலும் அச் சம்பவங்கள் நடந்துள்ளன.

செல்போனில் இருந்து வெளியாகும் கதிர்களை விடவும் அதில் உள்ள உலோகத்தால் ஆன பாகங்களால் தான் மேற்கண்ட ஆபத்து நேரிடுகிறது. மின்னல் அடிக்கும் நேரத்தில் வீட்டுக்கு வெளியே செல்போனையோ, கார்ட்லெஸ் (வயர்லெஸ்) போனையோ கூட பயன்படுத்தக் கூடாது. அவ்வளவு ஏன் வெளியே எடுத்துச்செல்லவே கூடாது என்று அவுஸ்திரேலியாவில் மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று அந்த டாக்டர்கள் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க, மின்னலுக்கும் செல்போன் அல்லது கார்ட்லெஸ் பயன்படுத்துபவருக்கும் இடையே நேரடித்தொடர்பு இல்லாததால் , அவர் மின்னலால் தாக்கப்படும் வாய்ப்பு இல்லை. எனவே வெட்டவெளியில் அவற்றைப் பயன்படுத்துவதால் ஆபத்து இல்லை என்று அமெரிக்க தேசிய வானிலைத் தகவல் மையத்தின் இணையத்தளத்தில் கூறப்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் மின்னல் ஏற்படும் நேரங்களில் நாம் செல்போனை பயன்படுத்தாதிருப்பது நல்லது. (க)

# புலிகளுடன் தொடர்பு வைத்திருக்கும் சிங்களவரைத் தண்டிக்க வேண்டும்!

## ஹெல உறுமய அரசிற்கு அழுத்தம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருக்கும் சிங்களவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

அண்மைக் காலத்தில் நாட்டில் இடம் பெற்ற சம்பவங்களுக்கு சில சிங்கள மக்களும் காரணமாக இருந்ததாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ள சில அமைச்சர்கள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் 48 இராணுவ அதிகாரிகளின் பெயர்களை தாம் சேகரித்துள்ளதாக தெரிவித்துள்ள அவர் விரைவில் அதனை வெளியிடப் போவதாகவும் அறிவித்துள்ளார். (க-9)

# வறுமையினால் பாடசாலை செல்லாத சிறுவர்கள்!

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரி பகுதிகளில் வாழ்ந்துவருகின்ற குடும்பங்களில் இருக்கின்ற பாடசாலை செல்கின்ற வயதையுடைய பல சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் இருந்து வருகின்றனர்.

இத்தகைய சிறுவர்களைப் பாடசாலைகளுக்குச் செல்ல வைப்பதற்காக இப்பகுதியில் இருக்கக்கூடிய சமுதாய ஆர்வலர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள் பல முயற்சிகளை எடுத்திருந்த போதிலும்கூட எதுவுமே பலனளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இச்சிறுவர்களின் குடும்பங்களில் நிலவுகின்ற வறுமை நிலை மற்றும் குடும்ப வாழ்வுக்கான வருமானம் இன்மை போன்ற காரணங்களினால் இத்தகைய சிறுவர்கள் கூலி வேலைகள் செய்யச் சென்று வருகின்றனர். இதனால் இச்சிறுவர்களின் எதிர்காலம் பெரியளவில் பாதிப்படைந்து வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. (க-16)

# அறுவடை வெளிவந்துள்ளது




(யாழ்ப்பாணம்)

தமிழ் செய்தி தகவல் மையத்தின் வெளியீடான அறுவடையின் மூன்றாவது இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது.

மாணவர்களுக்குப் பயன்படத்தக்க தாஜ்மஹால், சமாதானம் தேடும் சிட்டுக்குருவிகள், உயிரினமும் அறிவும், வான்மீகி, வீணை, வைரஸ், பிரான்சின் அரசியல் ஆகிய கட்டுரைகளுடன் இவ்விதழ் வெளிவந்துள்ளது. (து)

# கடமையைச் செய்யவிடாது தடுத்த பெண்கள் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

கிடைத்த தகவலின் அடிப்படையில் களவாகக் கசிப்பு தயாரிக்கும் வீடொன்றை பரிசோதிக்க சென்ற மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களை அவர்களது கடமையைச் செய்யவிடாமல் தடுத்ததற்காக தாயாரும் இரு மகள்மாரும் யாழ்.பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மடத்துவீதி என்னும் இடத்திலுள்ள ஒரு வீட்டில் நடைபெற்றது.

கசிப்பு தயாரிக்கும் அந்த வீட்டைச் சோதனையிடச் சென்ற மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களை அவ்வீட்டில் வசிக்கும் சிவசக்தி இராஜேஸ்வரி என்ற பெண்ணும் அவரது இரு மகள்மாரும் கடமையைச் செய்யவிடாது தடுத்ததுடன் கசிப்பு தயாரிப்பு உபகரணங்களை அப்புறப்படுத்தி ஒளித்து வைக்கவும் முயன்றுள்ளதாக தெரிகிறது.

அவ்வுத்தியோகத்தர்கள் இவ்விடயத்தை யாழ்.நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்ததை தொடர்ந்து நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட பெண் பொலிஸார் அவர்கள் மூவரையும் கைதுசெய்தனர்.

கடந்த 19ஆம் திகதி இவர்களது விசாரணை மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது தாயாரை மேலும் 14 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்குமாறும் மகள்மார் இருவரையும் சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்புமாறும் உத்தரவிட்டார்.

அரச உத்தியோகத்தர்களைக் கடமையில் ஈடுபடவிடாமல் தடுத்ததற்காக மகள்மார் இருவர் மீதும் பிறிதொரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (து-133)

# கடல் வான்களை மூடிவிடுமாறு இராணுவம் மீனவர்களுக்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கடந்த 28.05.2006 அன்று சற்கோட்டை கடற்கரையில் 3 மீனவர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கடல் வான் மட்டும் இருக்க மற்ற வான்கள் எல்லாம் மூடிவிட வேண்டுமென வடமராட்சி வடக்கு க.தொ.கூ. சங்கங்களுக்கு இராணுவத்தினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்தது.

கடந்த போர்க்கால சூழ்நிலையால் 20 வருடங்களுக்கு மேலாக வான் பாதை செப்பனிட முடியாத அளவிற்கு இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இப்பாதைகள் கற்களும் வளர்ந்துமண்ணும் நிறைந்து திட்டிகளாக காட்சி தந்தபோதிலும் பல சிரமங்களுக்கு மத்தியில்தான் தொழில் செய்து வந்தனர்.

நெக்கோட் நிறுவனத்தினால் 25இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு ஓரளவுக்கு இப்பாதைகள் செப்பனிடப்பட்டது.

2002ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் தொழில் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

எனினும் புனரமைப்பு வேலைகள் யாவும் திருப்திகரமாக அமையவில்லை. இராணுவத்தின் எச்சரிக்கையும் தங்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் என சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் எமது தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து செயற்பட்டதன் விளைவாக ஓரளவுக்குத் தன்னும் போய்வரக்கூடிய நிலையில் உள்ளது.

இந்நிலையில் கடல் வான்களை மூடுவது என்பது எம்மை அடக்கி ஒடுக்கும் நிலைக்குத் தள்ளப்படும். இதனால் இந்நடவடிக்கையை கண்டிக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-43)


## நாட்வெஸ்ட் ஒருநாள் தொடர்

# மஹெலாவின் அதிரடியான துடுப்பாட்டத்தினால் மூன்றாவது போட்டியிலும் வெற்றி பெற்று தொடரை தனதாக்கியது இலங்கை அணி

(செஸ்ரர் - லீ)

மஹெல ஜெயவர்த்தனாவின் அதிரடியான துடுப்பாட்டத்தினால் இலங்கையணி இங்கிலாந்துடனான மூன்றாவது போட்டியில் 8 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்று நாட்வெஸ்ட் தொடரையும் கைப்பற்றியது.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் சென்றுள்ள இலங்கையணி 5 போட்டிகள் கொண்ட நாட்வெஸ்ட் ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றது. முதல் 2 போட்டிகளிலும்



வெற்றிபெற்ற இலங்கையணி நேற்று முன்தினம் செஸ்ரல்-லீ நகரில் நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் உற்சாகத்துடன் களமிறங்கியது.

தனது சொந்த மண்ணில் தொடரை இலங்கையணி கைப்பற்றுவதை முறியடிக்க வேண்டுமே என்ற எண்ணத்துடன் களமிறங்கியது இங்கிலாந்து அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதனடிப்படையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மார்கஸ் தெரஸ்கோத்திக் மற்றும் அணித்தலைவர் ஸ்ரொரஸ் ஆகியோர் களமிறங்கினர். இருவரும் இங்கிலாந்து அணிக்கு சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக்கொடுத்தனர். இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 12.4 ஓவர்களில் 62 ஓட்டங்களைப் பெற்றபோது அணித்தலைவர் ஸ்ரொரஸ் 32 ஓட்டங்களுடன் சமிந்தவாஸின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து சென்றார்.

தொடர்ந்து களமிறங்கிய பெல் நிதானமாக துடுப்பெடுத்தாடினார். எனினும் மறுமுனையில் சிறப்பாகத் துடுப் பெடுத்தாடிய மார்கெஸ் தெரஸ்கோத்திக் அணி 14.4 ஓவர்களில் 75 ஓட்டங்களைப் பெற்றபோது அவர் 36 ஓட்டங்களுடன் சமிந்தவாஸின் பந்தில் போல்ட்டாகி ஆட்டமிழந்து சென்றார்.

தொடர்ந்து களமிறங்கிய இங்கிலாந்தின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் ஹெவின் பீற்றர்சன் 6 ஓட்டங்களை மாத்திரம் பெற்று மலிங்காவின் பந்தில் விக்கெட் கீப்பர் சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இங்கிலாந்து அணி 20.5 ஓவர்களில் 92 ஓட்டங்களைப் பெற்று சிறப்பான 3 விக்கெட்டுக்களை இழந்து ஒரு இக்கட்டான நிலையிலிருந்த அணியை பெல், ஹொரின் வூட் ஆகியோர் இணைந்து 53 ஓட்டங்களைப் பெற்று மீட்டனர்.

எனினும் அணி 33.1 ஓவர்களில் 145 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஹொலின் வூட் 33 ஓட்டங்களைப் பெற்று பண்டாராவின் பந்தில் டில்சானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பெல்லுடன் இணைந்த டெல்ரிபிள் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடினார். பெல் தனது அரைச்சதத்தை பூர்த்திசெய்தார். இருவரும் இணைந்து 65 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றபோது டெல்ரிம்பிள் 35 ஓட்டங்களுடன் மலிங்காவின் பந்தில் நேரடியாக போல் செய்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய விக்கெட் கீப்பர் ஜோன்ஸ் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். மறுமுனையில் பெல் அணி 48.6 ஓவர்களில் 252 ஓட்டங்களைப் பெற்றபோது அவர் 77 ஓட்டங்களைப் பெற்று ரன்-அவுட்டாகி ஆட்டமிழந்து சென்றார்.

இறுதியில் இங்கிலாந்து அணியினர் 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 261 ஓட்டங்களைப் பெற்றனர். ஜோன் ஆட்டமிழக்காமல் 13 பந்துகளில் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக சமிந்தவாஸ், மலிங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பண்டாரா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

50 ஓவர்களில் 262 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி பெற்று தொடரைக் கைப் பற்றிவிடலாம் என களமிறங்கியது இலங்கையணி.


ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய உப்புல் தரங்க, சனத் ஜெயசூர்ய ஆகியோர் ஆரம்பம் முதலே அதிரடியாக துடுப்பெடுத்தாடினர்.

எனினும் அணி 5.1 ஓவர்களில் 38 ஓட்டங்களைப் பெற்றபோது ஜெயசூர்யா 13 ப்ந்துகளில் 23 ஓட்டங்களைப் பெற்று துரதிஷ்டவசமாக ரன்-அவுட்டாகி ஆட்டமிழந்து சென்றார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் மஹெலஜெயவர்த்தனாவும் அதிரடியை ஆரம்பித்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக உப்புல் தரங்காவுடன் இணைந்து மஹெல ஜெயவர்த்தனா 87 ஓட்டங்களைப் பெற்றார். மஹெல ஜெயவர்த்தனா தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

அணி 16.4 ஓவர்களில் 125 ஓட்டங்களைப் பெற்றபோது உப்புல்தரங்க 41 ஓட்டங்களைப் பெற்று டெல்ரிம்பிளின் பந்தில் ஸ்ரொஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய குமார் சங்கக்கார ஜெயவர்த்தனாவுடன் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய மஹெல ஜெயவர்த்தனா ஒருநாள் போட்டியில் தனது 6ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர் காசார்கார் சோபிக்காததால் இலங்கை அணி 42.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்று இங்கி



லாந்து அணியை 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. இதில் துடுப்பாட்டத்தில் மஹெல ஜெயவர்த்தனா ஆட்டமிழக்காமல் 127 பந்துகளில் 126 ஓட்டங்களையும் குமார் சங்ககாரா ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டநாயகனாக மஹெல ஜெயவர்த்தன தெரிவானார்.

தொடர்ந்து தோல்விகளை பெற்று ஏமாற்றத்திலிருந்த இலங்கை ரசிகர்களை தற்பொழுது தொடர்ந்து 3 போட்டிகளில் வெற்றி பெற்று குதூகலத்தில் ஆழ்த்தியுள்ளனர் இலங்கையணி வீரர்கள். (க-5)




# சுவீடனை வீழ்த்திய ஜேர்மனியின் வெற்றி நடை தொடர்கின்றது

சுவீடனுக்கு எதிரான இரண்டாவது சுற்றில் ஜேர்மனி 2-1 என்று வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

ஒரு வீரர் வெளியேற்றப்பட்டது, பெனா



ல்டி வாய்ப்பை மிஸ் பண்ணியது என நிறைய சோகங்களுடன் சுவீடன் அணி தொடரில் இருந்து கனத்த இதயத்துடன் வெளியேறியது. இதில் நொக் அவுட் முறையிலான விறுவிறுப்பான இரண்டாம் சுற்று போட்டிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

முனீச்சில் நடந்த முதல் போட்டியில் ஜேர்மனி, சுவீடன் அணிகள் மோதின. மூன்று முறை சம்பியன், லீக் சுற்றில் நூறு சதவீத வெற்றி, சொந்த மண்ணில் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு என பலதரப்பட்ட சாதக அம்சங்களுடன் ஜேர்மனி வீரர்கள் உற்சாகமாக களமிறங்கினர். காலிறுதிக்கு முன்னேறும் கனவுடன் பலம்குன்றிய சுவீடனும் களம் புகுந்தது. இரு நாட்டு தேசிய கீதங்களுடன் போட்டி கோலாகலமாக ஆரம்பமாகியது.

விசில் ஊதிய முதல் நிமிடத்தில் இருந்தே ஜேர்மனி ஆதிக்கம் தான். ஆட்டத்தின் நான்காவது நிமிடத்தில் அந்த அற்புதம் அரங்கேறியது. சுவீடன் பெனால்டி எரியாவுக்குள் புகுந்த ஜேர்மனி வீரர்கள் விடாமல் தாக்குதல் நடத்தினர். முதல் வாய்ப்பில் மிராஜ்லோவ் குளோஸ் பந்தை அடிக்கிறார். சுவீடன் கோல்கீப்பர் ஆன்ட்ரியாஸ் இசாக்சன் அப்படியே படுத்து தடுக்கிறார். அவர் கையில் பட்டு திரும்பிவந்த பந்தை இம்முறை லூகாஸ் பொடோல்ஸ்கி 15 மீற்றர் தூரத்தில் இருந்து கிபீர் வேகத்தில் அடிக்க சுவீடன் தற்காப்பு வீரர் டெட்டி லூசிக் கையும் தாண்டி பந்து வலைக்குள் செல்ல ஜேர்மனி முதல் கோல் போட்டது. அரங்கமே ஆனந்த கோஷத்தில் அலறியது.

சுவீடன் மூச்சு விடுவதற்குள் இன்னொரு



தாக்குதல் ஆரம்பம். மீண்டும் குளோஸ், பொடோல்ஸ்கி பாஸ் செய்தார். அதை பொடோல்ஸ்கி சட்டென அடிக்க அழகான கோல் ஆக மாற 12ஆவது நிமிடத்தில் ஜேர்மனி 2-0 என்ற முன்னிலை பெற்றது. 17ஆவது நிமிடத்தில் அணித்தலைவர்பாலக் அடித்த பந்து தவறியது. அடுத்து குளோஸ் தலையால் முட்டிய பந்தும் நழுவியது.

இரண்டு கோல் வாங்கிய சோகத்தில் இருந்த சுவீடனுக்கு 34ஆவது நிமிடத்தில் பேரிடி விழுந்தது. இந்த அணியின் டெட்டி லூசிக் குளோசை முரட்டுத்தனமாக தடுக்க சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதையடுத்து சுவீடன் 10 பேருடன் விளையாட வேண்டிய பரிதாப நிலைமைக்குத் தள்ளப்பட்டது.

39ஆவது நிமிடத்தில் சுவீடனின் நட்சத்திர வீரரான இப்ராகிமோவிக் அடித்த உதை நழுவியது. முதல் பாதியில் ஜேர்மனியின் அடுத்தடுத்த தாக்குதலால் சுவீடன் கதிகலங்கிப் போனது. ஆட்டம் எப்போது



முடியும்? ஆளைவிட்டால் போதும் என்ற பரிதாப நிலைக்கு சுவீடன் வீரர்கள் தள்ளப்பட்டனர்.

இரண்டாவது பாதியில் சுவீடனுக்கு அருமையான வாய்ப்பு தேடி வந்தது. 52 ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் கிறிஸ்டோப் மெட்செல்டர், ஹென்ரிக் லார்சனை முரட்டுத்தனமாக தடுக்க சுவீடனுக்கு பெனா



ல்டி வாய்ப்பு தரப்பட்டது. இப்போது லார்சன் பந்தை அடிக்கவருகிறார். எதிரே தன்னந்தனி ஆளாக தடுக்க காத்திருக்கிறார் ஜேர்மன்கோல்கீப்பர் ஜேன்ஸ்லேமன். ஆனால் லார்சன் அடித்த பந்து கோல் போஸ்டுக்கு மேலே பனை மர உயரத்துக்கு பறந்து செல்ல அரிய வாய்ப்பு நழுவியது. இந்த சோகத்தில் இருந்து மீளாத சுவீடன் ஒரு கோல் கூட அடிக்காமல் வெளியேறியது.

இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற ஜேர்மனி கோப்பையை கைப்பற்றும் உறுதியுடன் காலிறுதிக்குள் முதல் அணியாக காலடி எடுத்து வைத்தது. ஜேர்மனி அணி வெற்றிக்கு கோல் கீப்பர் ஜேன்ஸ் லேமன் மிகவும் உற்சாகத்துடன் விளையாடினார். அவரின் தடுப்பால்தான் சுவீடன் மிகவும் போராடியது.

# மெக்சிகோவை போராடி வீழ்த்திய ஆர்ஜென்டினா காலிறுதிக்கு முன்னேறியது

மெக்சிகோவுக்கு எதிரான இரண்டாவது சுற்றுப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டினா வெற்றி பெற்றது. இதன்மூலம் உலக கோப்பை தொட



ரின் காலிறுதிக்கு முன்னேறியது ஆர்ஜென்டினா.

சேம்சைட் கோல் அடித்த மெக்சிகோ அணி வீணாக வாய்ப்பை இழந்து வெளியேறியது.

முதல் சுற்றுப் போட்டிகள் முடிவடைந்த நிலையில் 'ரவுண்ட் அப் 16' எனப்படும் இரண்டாவது சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதில் ஆர்ஜென்டினா, மெக்சிகோ அணிகள் மோதின. இருநாட்டு ரசிகர்களின் அமோக ஆதரவோடு லிப்ஸிக்கில் போட்டி ஆரம்பமானது.

எப்படியாவது காலிறுதிக்குள் நுழைந்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் மெக்சிகோ வீரர்கள் துடிப்புடன் செயல்பட்டனர். ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் கிடைத்த முதல் கோனர் வாய்ப்பை மெக்சிகோ வீணாக்கியது. 5ஆவது நிமிடத்தில் கிடைத்த பிறி-கிக் வாய்ப்பை மெக்சிகோ வீரர் பாவல் ப்பார்டோ அடித்தார். அதை மரியோ மண்டோஸ் தலையால் அடித்து பாஸ் செய்ய மின்னல் வேகத்தில் வந்த ரபேல் மார்கஸ் ஆட்டத்தின் முதல் கோலை அற்புதமாக அடித்தார்.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் ஆர்ஜென்டினாவுக்கு வாய்ப்பு அமைந்தது. கோனர் வாய்ப்பை ரிக்யூல்மா சொட் செய்ய அதை கிரஸ்போ கோலாக்க முயன்றார். ஆனால் அது மெக்சிகோ வீரர் ஜார்டு போர்கெட்டி தலையில் பட்டு சேம்சைட் கோலானது. தடுக்க நினைத்த மெக்சிகோ அணியின் நிலைமை பரிதாபத்தில் முடிந்தது. இதன்




மூலம் வெற்றிக்கான முன்னிலையை தானாக இழந்தது மெக்சிகோ.

இரு அணிகளும் கோல் அடிக்கும் வாய்ப்பை பலமுறை நழுவவிட முதல் பாதியில் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலை நீடித்தது.

இரண்டாவது பாதியின் ஆரம்பத்தில் ஆர்ஜென்டினாவுக்கு இரண்டு நல்ல வாய்ப்புகள் அமைந்தது. ஆட்டத்தின் 57 மற்றும் 59ஆவது நிமிடங்களில் கோல் லைனை நோக்கி அடித்த உதையை மெக்சிகோ கோல் கீப்பர் சான்சஸ் அபாரமாக தடுத்து விட்டார். இரு அணிகளுக்கும் கடுமையான போராட்டம் நடந்தது. மெக்சிகோவின் தடுப்பாட்டத்தை மீறி ஆர்ஜென்டினாவால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை.

76ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினாவின் நட்சத்திர வீரர்களான கிரஸ்போ, காம்பியாசோ வெளியேறினர். அவர்களுக்குப்பதிலாக தேவஸ், அய்மர் களமிறங்கினர்.



86ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினாவின் மெஸ்சி அடித்த கோல் ஓவ்சைட் கோலானது. ஆட்ட நேரமான 90ஆவது நிமிடம் வரை இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காததால் 30 நிமிடம் ஒதுக்கப்பட்டது. கூடுதல் நேரத்தில் ஆர் ஜென்டினாவுக்கு அடித்தது அதிர்ஷ்டம். தடைகளைத்தாண்டிபாஸ்செய்ய வந்த பாப்லோ



சோரின், பெனால்டி ஏரியாவுக்குள் பந்தை அடித் தார். அதை அப்படியே பெற்றுக் கொண்ட மேக்சி ரோட்ரிக்ஸ் அசுர வேகத்தில் கோல் லைனை நோக்கி அடித்து கோலாக்கினார். நீண்ட நேரமாக போராடி

அமிர்தன்


வந்த ஆர்ஜென்டினா நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

இதற்குப் பதிலடி தர நினைத்த மெக்சிகோவின் முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டினா வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது. துடிப்புடன் களமிறங்கிய மெக்சிகோ அணி சோகத்துடன் தொடரை விட்டு வெளியேறியது.

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 08

முருக-தனுஷ்கோடி



### காளியம்மன் கோவில் பீடத்தில்...!

அவர் முதன் முதலாக மேடையில் பேசியது எளிங்கநாயக்கன் பட்டியில்தான். விருதுநகரில் இருந்து 5மைல் தூரத்தில் அந்தக் கிராமம் உள்ளது. சுப்பராயபந்துலு என்ற நண்பரும் அப்போது அந்தக் கூட்டத்திற்கு உடன் வந்திருந்தார். 500 பேர்கள் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். அதாவது அந்தக் கிராமத்து மக்கள் எல்லோருமே அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோருமே தேசபக்தி உடையவர்கள். காந்திஜியின் புது அரசியல் முறையைப் பற்றித் தெரிந்துகொள்ள வந்தவர்கள் அவர்கள்.

தன்னுடைய அந்த முதல் மேடைப் பேச்சைக் குறித்துத் தலைவரே பின்னால் ஒரு முறை குறிப்பிட்டார்.

அக் காலத்திலும் சரி இப்போதும் சரி பிரசங்கம் செய்வது எனக்கு எப்போதும் பிடிக்காது. ஆனால் பிரசங்கம் செய்யாமலேயே இருக்க முடியவில்லை. நான் முதன் முதலாகப் பிரசங்கம் செய்தது எளிங்கநாயக்கன் பட்டி என்ற கிராமத்தில்தான். பிரசங்கம் அழகாக அமைய வேண்டும். எதுகை மோனை உதாரணம் எல்லாம் சரிவர அமையவேண்டும் என்றெல்லாம் எனக்கு எண்ணம் கிடையாது. சாதாரண ஜனங்கள் பாணியில் காங்கிரஸ் இலட்சியத்தைப்பற்றி எடுத்துச் சென்ன எனக்கு அந்த முதல் மேடைப் பிரசங்கத்தில் சபை நடுக்கம் கிடையாது. நான் எப்போதும் பேசுவது சில நிமிஷங்களே, வீணே வளர்ப்பதில்லை என்று காமராஜ் குறிப்பிட்டார்.

காமராஜ் பேசிய முதல் கூட்டத்திலும் சரி காளியம்மன் கோவில் பீடத்தில் ஏறிப் பேசிய வரவேற்புக் கூட்டத்திலும் சரி அவர் எதையும் வீணாக வளர்க்கவில்லை.

### துண்டை மடித்துத் தோளில் போடும் பழக்கம்

தன் பேரனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையின் காரணமாகவே பாட்டி பார்வதி அம்மாளின் உயிர் உடலில் ஒட்டிக் கொண்டிருந்தது. காமராஜ் விடுதலையாகி வந்த மறுநாளிலிருந்து பாட்டியின் உடல்நிலை மோசமாகியது. சில நாட்களில் அவர் உயிர் உடலிலிருந்து பிரிந்தது.

எங்கள் தெருவில் பாட்டி வைத்ததுதான் சட்டம். தெருவில் சிறுவர்கள் ஓடியாடி விளையாடுவதைப் பார்வதி அம்மாள் அனுமதிப்பார். ஆனால் சத்தம் போட்டுச் சண்டை போட்டால் பாட்டிக்குக் கோபம் வந்துவிடும் .திட்டி விரட்டுவார்.பாட்டி பிறந்தது செல்வாக்குள்ள நாட்டாண்மைக்காரர் வீட்டில். பாட்டியிடம் நானும் திட்டு வாங்கி யிருக்கிறேன். திட்டி விரட்டும்போது "நாடாம் வீட்டுக்கிழவி கத்துகிறாள்" என்று சொல்லிக்கொண்டே ஓடுவோம். பாட்டியின் துடுக்கான பேச்சு சிறுவர்களுக்குச் சங்கடத்தைக் கொடுத்தாலும் பாட்டி இறந்ததும் கண்ணீர் விட்டு அழுதோம்.

பாட்டியின் ஈமச்சடங்குகளைக் காமராஜ் முன்னின்று செய்தார். கருமாதி காரியங்கள் எல்லாம் நடந்தேறின. அதற்குப்பின் தலைவரிடம் பெரிய மாறுதலைக் கண்டேன். தோளில் துண்டு போட்டுக் கொள்ளத் தலைவர் ஆரம்பித்தார். துண்டை மடித்துத் தோளில் போட்டுக்கொள்ளும் வழக்கத்தைப் பாட்டி சென்ற ஒரு வாரத்திற்குப் பின் தலைவர் மேற்கொண்டார்.

## 03.காங்கிரஸ் பணிகள்

### ராஜாஜியுடன் பலப்பரீட்சை

கிங் மேக்கர் (King Maker)என்று காமராஜை மேலைநாட்டுப் பத்திரிகைகள் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் புகழ்ந்தன. தானே கட்சியாக ஆகி எந்தக் காரியத்தையும் சாதிக்கும் வல்லமையை அவர் பெற்றிருந்ததாலேயே பத்திரிகைகளின் இந்தப் பட்டம் அவருக்குக் கிடைத்தது. இந்தச் சாதனையைக் காமராஜ் பெரும் சோதனைக்கிடையே 1931ஆம் ஆண்டிலேயே செய்து காட்டினார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி மாநாடு 1931இல் மதுரையில் கூடியது. காங்கிரஸில் அப்போது இரண்டு கோஷ்டிகள் இருந்தன. ஒன்று சத்தியமூர்த்தி கோஷ்டி; இன்னொன்று ராஜாஜி கோஷ்டி. மாறுதல் விரும்பாத கட்சி என்ற பெயருடன் ராஜாஜி கோஷ்டியில் கதர்ச்சங்கத்தைச் சேர்ந்தவர்களும் கதர்க் கடையில் உள்ளவர்களும் இருந்தார்கள். சத்தியமூர்த்தி கோஷ்டியில் இருந்தவர்கள் பணம் இல்லாத கூட்டம் ,செல்வாக்கு இல்லாத கூட்டம் என்ற கருத்து அப்போது நிலவியது. "பணம் இல்லை என்பதற்காகச் சத்தியமூர்த்தியைப் புறக்கணிப்பதா? இது அநியாயம் ,அக்கிரமம் , நீண்ட நாள் இது நீடிக்காது" என்று போர்க் கோலம் பூண்டார் காமராஜ் .சத்தியமூர்த்திக்கு ஆதரவு திரட்ட முடிவு செய்து அவர் பக்கம் நின்றார்.

இந்த மாநாட்டுக்குச் சத்தியமூர்த்தி தலைவராக இருந்ததால் சத்தியமூர்த்தி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். ராஜாஜி கோஷ்டியினர் இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ளவில்லை. காழ்ப்பை எல்லாம் கட்டி நடத்தும் பொதுவிழாவில் காட்டுவதா எனச் சத்தியமூர்த்தி கோஷ்டியினர் ஆத்திரம் அடைந்தனர். மாநாடு முடிந்ததும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தல் நடந்தது.டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு, திரு. வி.கலியாணசுந்தர முதலியார், ஈ.வெ.ரா. பெரியார், சீனிவாச ஐயங்கார் ஆகியோர் காங்கிரஸில் இருந்து விலகினர் .அந்தச் சமயத்தில்தான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தல் நடந்தது.

ராஜாஜியைத் தலைவராக்கி சத்தியமூர்த்தியைத் துணைத்தலைவராக்குவது என்று ராஜாஜியிடம் பேசப்பட்டது. ராஜாஜியும் அவரது கோஷ்டியினரும் இதற்குச் சம்மதித்தனர் .தலைவர் தேர்தல் நடந்தது. பேசியபடி ராஜாஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துணைத் தலைவர் தேர்தலுக்குப் பேசியபடி சத்தியமூர்த்தியின் பெயர் பிரேரிக்கப்பட்டது. அப்போது ராஜாஜி கோஷ்டியினர் திடீரெனச் சர்தார் வேதரத்தினம் பெயரைச் சத்தியமூர்த்திக்குப் போட்டியாகப் பிரேரித்தனர். பேசியபடி நடக்காமல், சத்தியத்தைக் காற்றில் பறக்க விடுவதா எனச் சத்தியமூர்த்தி கோஷ்டியினர் ஆத்திரம் அடைந்தனர். உடனே சத்தியமூர்த்தி கோஷ்டியினர் திருவண்ணாமலை அண்ணாமலைப்பிள்ளை பெயரைப் பிரேரித்தனர். பின்னர் ராஜாஜி கோஷ்டி இறங்கி வந்தது. பேச்சுவார்த்தை நடந்தது. சமரசமும் ஏற்பட்டது. சத்தியமூர்த்தி துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காரியக் கமிட்டி முழுவதையும் சத்தியமூர்த்தி கோஷ்டியினர் கைப்பற்றி ஆக்கிரமித்தனர். ராஜாஜி அந்த ஆண்டில் தலைவராக இருந்தாரே தவிர காரியக் கமிட்டி முழுவதும் சத்தியமூர்த்தி கோஷ்டியிடமே இருந்தது. காரியக்கமிட்டி உறுப்பினர்களின் மெஜாரிட்டியை சத்தியமூர்த்தி பெற காமராஜ் முன்னின்று வேலை செய்தார். காமராஜ் முனைந்து அப்போது வேலை செய்திருக்காவிட்டால் காரியக் கமிட்டியை சத்தியமூர்த்தி கோஷ்டி கைப்பற்றியிருக்கவே முடியாது. அப்போதுதான் முதன் முதலாகக் காமராஜ் காங்கிரஸ் காரியக்கமிட்டி உறுப்பி ஆனார். அப்போதுதான் இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்சியின் தலைவிதியை நிர்ணயிக்கும் காரியக் கமிட்டியை உருவாக்குவதில் அன்றே அவர் ஈடுபட்டார். வெற்றியும் பெற்றார். சிறு வயதிலே யானையை அடக்கியவருக்கு இந்த வெற்றி பெரிதல்ல!.

(தொடரும்)

## உள் முரண்பாடுகள் காரணமாக— இயங்காதிருக்கும் ச.ச.நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கின்ற 75 வீதமான சனசமூக நிலையங்கள் நிர்வாக உட்பூசல்கள், ஒற்றுமையின்மை மற்றும் நிதியின்மை போன்ற காரணங்களினால் இயங்காமல் இருந்து வருகின்றன.

இதனால் இத்தகைய கிராம மட்ட அமைப்புக்களின்னால் கிராமிய மட்ட அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

பெரும்பாலான சனசமூக நிலையங்களில்உச்சக் கட்ட நிர்வாகமுரண்பாடுகளும் தலைமைத்துவப் போட்டிகளும் கூட நிலவிவருகின்றன.

மேலும் இத்தகைய சனசமூக நிலையங்களினால் முன்னெடுக்கப்படவேண்டிய கல்வி, சுகாதார, விளையாட்டு போன்ற செயல்பாடுகள் அத்தகைய கிராமங்களில் முன்னெடுக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சனசமூக நிலையங்கள் காத்திரமான நிலையில் செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடிய முறையில் அவற்றில் நிதி நிலைமைகளும் வளமாக இல்லாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இது இவ்விதமிருக்க சனசமூக நிலையங்களுக்குப் பொறுப்பாக அவ்வப் பகுதிகளில் நியமிக்கப்பட்டுள்ள அரச அதிகாரிகள் கூட இயங்காமல் இருக்கின்ற சனசமூக நிலையங்களை இயங்க வைத்து கிராமிய மக்களின் சமூக, கல்வி, சுகாதார மேம்பாட்டுத்திட்டங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும் நிலையில் இல்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கிராமிய மட்ட அமைப்புக்கள் செயல்படாமல் இருக்கும் போது பிரதேச மட்ட அபிவிருத்தியோ அல்லது முன்னேற்றமோ சாத்தியப்படாது என அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க-16)

## புதிய காவலரண்

கரணவாய் ,நவிண்டில் வடக்கு அப்பா பாடசாலைக்கு முன்பாக இராணுவத்தினரால் கடந்த வெள்ளிக்கிழமை புதிய காவலரண் அமைக்கப்பட்டுள்ளதையடுத்து அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளதாகத் தெரிகிறது. (கு-15,133)

## நீதிமன்றில் பதிவு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு செல்லும் அனைவரும் அங்கு பதிவு செய்யப்படுகின்றனர் .

அங்கு செல்வோரின் வழக்கு இல, அடையாள அட்டை இல, முகவரி போன்றவை பதிவு செய்யப்படுகின்றன.

இந்த நடைமுறை கடந்த 20 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக நீதிமன்ற ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (க-72)



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" ஆன்மீக சஞ்சிகையின் 100ஆவது மலர் வெளியீட்டு விழாவின் போது வறுமைக் கோட்டில் வாழும் மாணவி ஒருவருக்கு கன்னாதிட்டி மக்கள் வங்கியைச் சேர்ந்த சி.பத்மநாதன் தையல் மெசின் ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம் :-மருதங்கேணி நிருபர்)



திருநெல்வேலி சாயி சமித்தியில் ஈஸ்வராம்பாள் தினத்தை முன்னிட்டு பாலவிகாஷ் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற செல்வி இ.காயத்திரி உரைநிகழ்த்துவதையும், பரிசு பெற்ற மற்றொரு மாணவியான செல்வி இ.கம்சாயினிக்கு யாழ்/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்- இருபாலை செய்தியாளர்)



# இளைஞர்களை போதைப்பொருட்களின் சாம்ராஜ்யத்திலிருந்து மீட்டெடுப்போம்

**இன்று போதைப் பொருள் எதிர்ப்புத்தினமாகும் அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

இன்றைய கால கட்டத்தில் நவீன விஞ்ஞான தொழில்நுட்பமானது வெண்ணிலாவையும் தாண்டிவிட்டது. மனிதன் புதிய யுகத்தில் காலடி எடுத்து வைத்துள்ளான். தினம் ஒரு புதிய சாதானைகளை நிகழ்த்தி உலகையே ஆச்சரியத்திற்குள்ளாக்கி கொண்டிக்கின்ற வேளையில் அதே மனிதனுடைய மாறுபட்ட செயற்பாடுகள் அச்சுறுத்தலுக்குள் ஆழ்த்திவிடுகின்றது.

அது என்னவென்றால் அனைத்துலக நாடுகளின் ஜனநாயகத்திற்கே சவாலாகிக் கொண்டிருக்கும் போதைப் பொருட்களின் பாவனை ஆகும். உலகில் பாரியளவில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனை, அதன் விளைவுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையில் உலக சுகாதார ஸ்தாபனம் உலக போதைப் பொருள் தடுப்புத்தினமாக (WORLD ANTI DRUG DAY) ஒவ்வோராண்டும் யூன்26ஆம்திகதியைப் பிரகடனம் செய்துள்ளது.

போதைப் பொருள் என்றால் 'உயிருள்ள பிராணி உட்கொள்ளும்போது அதன் செயல்களுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோமாற்றியமைக்கும்பொருள்போதைப் பொருள்' எனவரையறைசெய்துள்ளது உலக சுகாதார ஸ்தாபனம்.

உலகளாவிய ரீதியில் இது குறித்து இத்தினத்தன்று மாநாடுகள், கருத்தரங்குகள், ஆய்வுகள் நடத்தப்படுகின்றமையும், உலகிலிருந்து போதைப் பொருள் பாவனையை ஒழிக்க எடுக்கும் நடவடிக்கைகள், போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகள் பற்றிய புதிய புதிய செயற்பாடுகள், நடவடிக்கைகள்முன்னெடுக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இத்தகு நடவடிக்கைகள் உலகிலிருந்து போதைப் பொருள் பாவனையை ஒழிக்கவோ அல்லது குறைந்த பட்சம் கட்டுப்படுத்தவோ முடிவதில்லை என்பதே யதார்த்தம்.

உலகிலே போதைப் பொருள் பாவனை அனேகமாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிலேயே காணப்படுகிறது. பொருளாதாரம், அரசியல் போன்றவற்றில் வல்லரசான நாடுகளைக் கூடி இப்போதைப் பொருளானது நாட்டின் எதிர்காலத்தையும் பொருளாதாரத்தையும் சீர் குலைத்து விடுகின்றது.

போதைப் பொருட்களில் பல வகையானது தற்போது பாவனைக்குட்படுத்தப் படுகின்றது. அதன் வரிசையில் அபின், கஞ்சா, ஹெரோயின், மோர்பின், L.S.D, கொக்கோயன், பிறவிண், அம்படாமின், சரேட்ஸ், ஹலிஸ், தூக்க மாத்திரைகள் இப்போதைப்பொருள்உற்பத்தியில் பெரிதும் அக்கறை செலுத்தும் நாடுகளைத் தங்கப் பிறை நாடுகள், தங்க முக்கோண நாடுகள் என இருவகையில் காணப்படுகிறது. தங்கப்பிறையில் பாகிஸ்தான், ஈரான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளும் தங்கமுக்கோணத்தில் பர்மா, லாவோஸ், தாய்லாந்து போன்ற நாடுகளும் உள்ளடங்குகின்றது. இந் நாடுகளின் உற்பத்தி இலங்கையின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்தப்படுகின்றது. இதன் காரணமாகவே இலங்கையில் இது பெருளவு பரவுத் தொடங்கியது.

விமானம் மூலமாகவும், கடல் மார்க்கமாகவும் போதைப் பொருள் கடத்தி வரப் படுகின்றது. இலங்கைக்கு பெருமளவு கடல் மூலமே கடத்தி வரப்படுகின்றது. இலங்கை ஒரு கேந்திர நிலையமாக பயன் படுவதாகவும் சர்வதேச பொலிஸ் எச்சரிக்கை செய்துள்ளது.

1980ஆம் ஆண்டுவரை போதைப் பொருள் என்ற பயங்கரவாதம் இலங்கைக்கு ஒரு பாரிய பிரச்சினையாக இருக்கவில்லை. கஞ்சாவே நூற்றாண்டு போதையூட்டும் பொருளாக இருந்தது. 1981இல் ஹேரோயின் எனும் கொடிய போதைப் பொருள் கண்டுபிடிப்புடன் நிலைமை மோசமாகிவிட்டது. இலங்கையில் போதை வஸ்துக்கு அடிமையாகி உள்ளோரை பின் வரும் முறையில் வகுக்லாம் 15- 25 வயது வரை 38வீதம், 26வயது-40 வரை 51 வீதம் 41ற்குமேல் 11வீதம் தற்போது இலங்கை சிறைச்சாலையில் காணப்படும் குற்றவாளிகளில் 47 வீதம் போதைப்பொருள் சம்பந்தமாக குற்றமிழைத்தோர். இதில் 25 வீதம் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று 192 வெளிநாட்டவர் இலங்கைச் சிறையில் வாடுகின்றனர். இவர்களுள் 33 பேர் பெண்கள்.

இலங்கையில் போதைப் பொருளைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ் சேவையில் 'போதைப் பொருள் பணியகம்' எனும் மத்திய முகவராண்மை நிலைய மொன்றை அமைத்து அதனை சிரேஷ்ட பொலிஸ் அதிபர் ஒருவரின் தலைமையில் இயங்க வைக்கப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்களமும் போதைப் பொருள் பிரிவு ஒன்றை இயக்கி வருகின்றது. 1984 ஆம் ஆண்டின் நாடாளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் இது மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனைக்குரியதோர் குற்றமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மலேசியா போன்ற நாடுகளில் போதைப் பொருளுடன் ஒருவர் காணப் படுவராயின் வேறு விசாரணை இன்றி அவருக்கு மரண தண்டனை வழங்கப்படும். இவை அனைத்துக்கும் மேலாக போதைப் பொருள் பாவனைக்கு எதிரான இயக்கம் 'ஸ்லானா' (SLANA) SRILANKA ANTI NARCORTICS ASSOCIATION ஒன்றை அண்மைக்காலத்தில் இலங்கை ஸ்தாபித்துள்ளது. இவைகள் எல்லாம் செயற்பட்டும் இலங்கையில் போதைப் பொருள் பாவனை அதிகரிக்கிறது என்பதே கசப்பான உண்மை ஆகும்.

கஞ்சா பொப்பித்தாவரம் என்ற கனவைஸ் சற்றைவா என்ற சணல் வகைத் தாரத்திலிருந்து பெறப்படுகிறது. இது இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் சட்ட விரோதமாகப் பயிரிடப்படுகின்றது. கள்ளச் சந்தைகள் ஊடாக இது கடத்தப்படுகின்றது. ஆகவே அண்மைக் காலத் தரவுகளின் படி இலங்கை ஒரு போதைப் பொருள் உற்பத்தி வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்ற தகவலானது எம்மை வியப்புக்குள்ளாக்கின்றது.

இதைவிட பெரியவர்களால் பாலியல் துன்புறுத்தல், வேலைவாங்கல் முயற்சிகளு காக சிறுவர்கள் கூட போதைக்கு அடிமைப்ப டுத்தப்படுகிறார்கள் என்பது கசப்பான உண்மையாகும். இவையெல்லாம் தவறு என்று சுட்டிக்காட்டுவதற்கு இளைஞர் மத்தியில் யாரும் இல்லாததே கவலைக்குரிய விடயமாகும். இது இன்றைய நாளில் அனைவரும் சிந்திக்க வேண்டிய பாரிய பிரச்சினையாகும்.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி அமெரிக்காவில் 60 வீதமானோர் போதைப் பொருள் பிரியர்களாகக் காணப்படுகிறார்கள். இவ் 60 வீதமானோர் இளைஞர்களே என்பது எம்மைத் திகிலடையச் செய்கிறது.

இவர்களில் 20வீதமா னோர் போதைப் பொருள் பாவனையைவிட முடியாதவர்கள். 30 வீதமானோர் தம்மை இப்பழக்கத்திலிருந்து விடுவிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். 10 வீதமானோர் பாடசாலைகள் மூலமாகவே புத்திமதி வழங்கும் நிலையில் உள்ளோராகக் கருதப்படுகிறார்கள்.

போதைப் பொருட்கள் என்பது நாம் உண்ணும்போது நமது உடலிலும், நடத்தையிலும், மனதிலும் மாற்றங்களை ஏற்படுத்தவல்லன. இப்போதைப் பொருளானது வாயினால் உட்கொள்ளல், நீரில் கரைத்துக் குடித்தல், முரசில் தேய்த்தல், சூடுகாட்டும்போது வெளியாகும் புகையைச் சுவாசிப்பது, தாள்களாகவும், லேகியமாகவும், மாத்திரைகளாகவும், ஊசிமூலமும் உட்செலுத்தக் கூடிய திரவமாகவும் எனப் பல நிலைகளில் பாவனைக்குட்படுத்தப்படுகிறது.

உட்செலுத்தும் முறையில் ஊசி மூலம் செலுத்தும் முறையே பிரபலமானதாகவுள்ளமை கண்கூடு. போதையை ஒரு தடவை பயன்படுத்தியவர் மீள சந்தர்ப்பம் இல்லை. வெறிபோன்றதான ஒரு இன்ப நிலை போதைப் பொருள் பாவித்த ஒருவர் அதனால் பெறும் இன்பத்தை மீண்டும் பெறவே முயற்சிக்கிறார். இதனையே போதைப் பொருள் அடிமைநிலை என்கிறோம். இந்நிலை 3 வகையில் காணப்படலாம்.

* உடல் தோற்றத்தில் காணப்படும் அடிமைநிலை பாவிப்பவர் பாவியாது விடின் நடுக்கம் தலைவலி வரும்.

* தாங்கும் நிறம்-உடலில் அதன் தாக்கம் நிறைந்து காணப்படும். நடைமுறை வாழ்க்கைக்கு கட்டாயமாக தேவைப்படும்.

* மன அடிமைநிலை-இது தனிமனித உளப்பாங்கைப் பொறுத்தது. போதைப் பொருளுக்கு அடிமையாகிய மனநிலை உருவாகி, சாதாரண வாழ்க்கையில் இருந்து விலகி போதைப் பொருளை நாடித் திரியும் நிலை.

இப் போதைப் பொருளால் பல வருடங்கள் வாழும் உடல்கள் சில வருடங் களிலேயே செயலிழக்கின்றன. எவ்வாறென்றால் தொடர்நிலையில் போதைப் பொருள் பாவிப்பதனால் எம் உடலின் பிரதான உறுப்புகளில் ஒன்றாகிய ஈரல் கலங்களை இறக்கச் செய்து ஈரலைக் கட்டியடையச் செய்கிறது, நரம்புத் தளர்ச்சியை உண்டாக்குகிறது, கண்பார்வை குறைவடைகிறது, செவிப்புலன்கள் செயலிழக்கின்றது, இதயக் கோளாறுகள் ஏற்படுகின்றது, போதைப் பொருள் பாவனையாளரின் மூளை அலை வரிசைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது உடல் சமநிலை குன்றியும் வயதுக்கேற்ப விருத்தியின்மையாகவும் காணப்படுவார்கள். மூளை நரம்புகளைப் பாதித்து மூளையின் சிந்தனை ஆற்றலைக் குறைக்கின்றது. இதனால் எதிர்காலத்தில் சிந்தித்து செயலாற்ற வேண்டிய இளைஞர்களின் மூளை பாதிப்புக்குள்ளாவதால் எதிர்காலத்தில் வாழ அருகதையற்ற இளைஞர் சமுதாயமே உருவாகிறது.

ஊனமுற்ற சமதாயம் உருவாகிக் கொள்வதால் நாட்டின் எதிர்காலம் கேள்விக் குறிதான். போதைப் பொருள் பாவனையால் பாலியல் தொடர்பான ஓமோன்களையும் பாதிக்கின்றது. இன்று மிக விரைவாக பரவிவரும் ஆட்கொல்லி நோயான எயிட்ஸ் பரவுவதற்கான பின்புலமாக போதைப் பொருள் பாவனை உள்ளது என்பதைக் குறிப்பிடலாம்.

இவையேயன்றி சமூகத்தில் ஏற்படும் ஒழுக்கக் கேடுகள், நெறிபிறழ்வுகளும் சீரழிவுகளும் ஏற்பட்டு சமுதாயம் சீர்குலையப் போதைப் பொருள் பாவனை முக்கிய காரணியாகிறது.

போதைப்பொருள் பாவிப்பதனால் சுயசிந்தனையற்ற செயல்களினால் சமூக விரோதச் செயல்கள் அதிகரித்து வருகின்றது. இதற்கான தூண்டு கோலாக அமைவது என்னவென்றால் போதைப் பிரியர்கள் தொடர்ந்தும் போதைப் பொருளை வாங்குவதற்காக பணம் இல்லாத காரணத்தால் கொலை, கொள்ளை, களவு போன்ற வழிகளில் பணத்தைப் பெற முயற்சிக்கின்றனர்.

போதை பயன்படுத்தியவர் போதை தலைக்கேற எதையும் செய்யத் தயங்குவதில்லை. அதனால் தான் ஆட் கடத்தல், பாலியல் புலாத்காரம், வழிப்பறி போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்.

தனி மனிதன் பாதிப்படைவது மட்டுமன்றி அவனோடு இணைந்த சமூகமும் பாதிப்படைகின்றது. போதைப் பொருள் பாவனையாளர் தம் குடும்பத்தில் மனைவி, பிள்ளைகளைத் துன்புறுத்துவதும் தம் பிள்ளைகளை இப்பழக்கத்தில் ஈடுபடுத்த முயற்சிப்பதும் இதனால் அக் குடும்பம் சமூக அந்தஸ்தை இழக்க நேரிடுகிறது. இவ் வேளைகளில் போதைப் பிரியர்கள் சமூகக் கட்டமைப்பிலிருந்து ஒதுக்கப்படுகிறார்கள்.

சமூகம் அவனுக்கு தனி மனித அந்தஸ்தைக் கொடுக்க மறுக்கின்றது. இதனால் மேன்மேலும் போதைப் பாவனையாளர் தாழ்வு மனப்பான்மைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதனால் இவர்கள் இறுதியாக தற்கொலை என்ற தவறான முடிவுக்கு வருகிறார்கள்.

போதைப் பிரியர்களை மரண வாசலுக்கு செல்லாது தடுத்து புது வாழ்வளிக்க வேண்டும். இவர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க இலங்கையில் பல இடங்களில் புனர் வாழ்வு மையங்கள் செயற்படுகின்றது. அவையாவன கொழும்பிலுள்ள தலங்கம, கண்டியிலுள்ள ஹந்திஸ்ஸ, காலியிலுள்ள உணவட்டுன போன்றனவாகும். போதைக்கு அடிமையானவர்களுக்கு மீட்சியின் பின் இளமைப் பருவ வாழ்வின் பெறுமதியை உணரவைக்க வேண்டும். இவர்களும் சமூகத்தால் மதிக்கப்படுவர் சமூகத்திற்கும் நாட்டிற்கும் தேவையானவர் என்றும் இவர்களுடைய முக்கியத்துவத்தை புரிய எடுத்துரைத்தல் வேண்டும்.

இவ்வாறான ஆட்கொல்லி நோயான போதைப்பொருள் பாவனையிலிருந்து எமது இளைய தலைமுறையினரை எவ்வாறு மீட்சிப்பாதைக்கு இட்டுச் செல்லலாம் என்பதைப் பற்றி சிந்திப்பது இத் தருணத்தில் எல்லோருக்கும் உள்ள சவாலாகும். இவ்வுலகம் போதை எனும் மாயையில் இருந்து சுபீட்சம் பெறவேண்டும் என்ற உணர்ச்சி எல்லா உயிர்களாலும் உணரப்பட வேண்டும் இன்றிலிருந்தாவது.

**செல்வி. றொஷானி செந்தில்செல்வன்**
*யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை*
*பருத்தித்துறை (2006 வர்த்தகப் பிரிவு)*

# "வாழுங்கணங்கள்" ஒளிப்படக் கண்காட்சி

(கிளிநொச்சி)

ஒளிப்படக்கலைஞர் அ.அமரதாஸின் 'வாழுங்கணங்கள்', புகைப்படக் கண்காட்சி கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியில் நடைபெறுகிறது. இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று காலை 9.00 மணிக்கு இடம்பெற்றது. தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், வணிக ஒன்றியப் பொறுப்பாளர் வெற்றியரசன் ஆகியோர் காட்சிப்படங்களைச் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தனர்.

தொடர்ந்து 5 நாட்கள் நடைபெறவுள்ள இக்கண் காட்சியில் தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இலங்கைத்தீவின் பல் வேறு பாகங்களிலும் எடுக்கப்பட்ட மக்கள் வாழ்வின் பதிவுகளான ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அ.அமரதாஸின் ஒளிப்படங்களைக் கொண்ட வாழுங் கணங்கள் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சியில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (க)

> பொதுவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் அதை கவர்ச்சிமிக்க பலன்கள் கிட்டும் வாழ்க்கையாக கருதக் கூடாது.
>
> -டாக்டர் இராதாக்கிருஷ்ணன்

வலம்புரி

## கண்காணிப்புக்குழுத் தலைமை நோர்வேயிடம் இருப்பதில் என்ன தவறு?

இனப்பிரச்சினைக்கான தீர்வில் அனுசரணைப் பணியை வகிக்கும் நோர்வே இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் பொதுவான - நடுநிலையான நாடாக விளங்குகின்றது.

எனினும் நோர்வேயின் அனுசரணைப் பணியில் இலங்கையரசுக்கு அவ்வளவாகத் திருப்தியில்லை. இதைப் பலதடவை உறுதி செய்வதாக அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

அவற்றில் ஒன்றாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பதவியில் நோர்வே நாட்டைச் சேர்ந்தவர் இருக்கலாகாது என்ற இலங்கையரசின் நிபந்தனையாகும்.

சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணியை வகிக்கும் நாட்டைச் சேர்ந்த ஒருவர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக இருக்கக் கூடாதெனும் இலங்கையரசின் நிபந்தனை வேடிக்கைக்கும், விநோதத்திற்கும் உரியதாகும்.

நோர்வே மீது நம்பிக்கையிருந்தால் மட்டுமே அதன் அனுசரணைப் பணியை ஏற்க வேண்டும். நோர்வேயைப் பொறுத்தவரை இலங்கை இனப்பிரச்சினையில் வலிந்து தலையிட்ட நாடல்ல.

இலங்கையரசும் விடுதலைப்புலிகளும் கேட்டுக் கொண்டதற்கமையவே சமாதான அனுசரணைப் பணியை நோர்வே ஏற்றுக் கொண்டது.

இதனால் நோர்வேக்கு எதுவித சுயலாபமும் கிடையாது. ஆக, யுத்தத்தால் அழிந்து போகும் மனித உயிர்களைக் காப்பாற்றிய புண்ணியமும் ஒரு நாட்டில் பேச்சுவார்த்தை மூலம் அமைதியை ஏற்படுத்திய பெருமையுமே நோர்வேயைச் சாரும். இதைவிட வேறுஎதுவும் நோர்வேக்குக் கிடைக்க மாட்டாது.

மாறாக இலங்கையில் சமாதானம் ஏற்பட்டால் அதன் முழு நன்மையும் இலங்கை மக்களையேசாரும். இதில் வேறுபட்ட கருத்துக்கு இடம் இருக்க முடியாது.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பதவியில் நோர்வேயைச் சேர்ந்த ஒருவர் இருக்கலாகாது என்ற இலங்கையரசின் இறுக்கமான அறிவிப்பு அரசுக்கு இருக்கக் கூடிய நோர்வே மீதான நம்பிக்கையீனத்தை வெளிக்காட்டுகின்றது.

ஏற்கனவே ஜே.வி.பி., ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகள் நோர்வேயின் அனுசரணைப் பணியை எதிர்த்து வருகின்றன.

நோர்வேக்கு எதிராக பௌத்த பிக்குகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியமை, நோர்வே நாட்டின் தேசியக் கொடியை எரித்தமை போன்ற நிகழ்வுகள் எல்லாம் நடந்து முடிந்தவை.

இவை பேரினவாதிகளின் பேயாட்டம் எனப் பேசாது விடலாம் என்றால் அதுதான் முடியாத காரியம்.

ஏனெனில், நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய மட்டும் எதிர்ப்பல்ல. மாறாக அரசும் கடும் எதிர்ப்பை மறைமுகமாகக் காட்டிவருகின்றது.

அதனாலே கண்காணிப்புக் குழுத் தலைமைப் பதவியில் நோர்வே நாட்டைச் சேர்ந்தவர் இருக்கக் கூடாது என அரசு அறிவிக்கின்றது. இலங்கையரசுக்கு நோர்வேமீது நம்பிக்கையிருந்தால், இந்த அறிவிப்புத் தேவையற்றதாகும்.

மேற்கூறப்பட்டவை நோர்வேமீது இலங்கையரசுக்கு இருக்கக் கூடிய அவநம்பிக்கையை துலாம்பரப்படுத்துகின்றது.

# 28 இராணுவத்தினர் புலிகளுக்கு உளவு பார்த்து உதவினார்களாம்

(கொழும்பு)

வெலிஓயாகல்யாணபுர இராணுவ முகாமுடன் இணைந்து பணியாற்றிக்கொண்டு விடுதலைப்புலிகளுக்கு உளவு பார்த்ததாக கூறப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் அந்த முகாம் அதிகாரிகளினால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவரைப் போன்று விடுதலைப் புலிகளுக்கு உளவு பார்த்த மேலும் பல இராணுவத்தினர் மற்றும் அதிகாரிகள் என 28 பேரின் விவரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உடனடியாக செயற்பட்ட இராணுவப்பொலிஸார் மேலும் 5 பேரை கைது செய்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். முதலில் கைது செய்யப்பட்டவர் திருகோணமலை கோமரன் கடவெல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் 5 மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தில் இணைந்த இவர் சிங்கப் படைப் பிரிவினைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.

அவர் வெலிஓயா முன்னணி பாதுகாப்பு அரணில் பணியாற்றிய வேளை அடிக்கடி பதுங்கு குழியிலிருந்து வெளியே சென்று செல்லிடப்பேசியில் அழைப்புக்களை எடுத்துள்ளார். இவரின் நடவடிக்கை குறித்து சந்தேகித்த அந்த முகாமைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவர் அவர் அறியாமலே சில காலம் அவரைக் கண்காணித்துள்ளார். அதன்போது இந்த இராணுவச் சிப்பாய் செய்மதி தொலைபேசியொன்றிலிருந்தே அழைப்புக்களை எடுத்துள்ளாரெனத் தெரியவந்துள்ளது.

செய்மதி தொலைபேசியொன்றை சாதாரண இராணுவச் சிப்பாய் பயன்படுத்துவதற்கு வாய்ப்பில்லை என்பதனையும், அது அதிக பெறுமதி வாய்ந்தது என்பதையும் அறிந்திருந்த சார்ஜன்ட் தான் அறிந்து கொண்டவற்றை தனது உயரதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணைகளில் அவர் விடுதலைப் புலிகளின் உளவாளியாக செயற்பட்டதும் விடுதலைப் புலிகளே அவருக்கு அந்த தொலை பேசியைப் பெற்றுக்கொடுத்துள்ளனர் என்பதும் தெரியவந் துள்ளது.

தன்னைப் போன்று இராணுவத்தினர், அதிகாரிகள் என மேலும் 28 பேர் இராணுவத்தில் இருந்து கொண்டு விடுதலைப் புலிகளுக்கு தகவல்கள் வழங்குவதாக அந்த இராணுவச் சிப்பாய் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் சிறப்பு அதிரடிப்படை, இராணுவ கொமாண்டோ பிரிவு மற்றும் இராணுவ ப்பொலிஸ் பிரிவில் இவ்வாறு விடுதலைப்புலி உளவாளிகள் இருப்பதாக கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் கூறியிருப்பதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த இராணுவச் சிப்பாய் பாதுகாப்பு முன்னரங்கில் பணியாற்றிய சில நேரங்களில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் பதுங்கு குழிக்கு வந்து அவருக்கு உணவு மற்றும் பானங்களை வழங்கியிருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள் ளது.

இவர் ஏனைய இராணுவத்தினருடன் கிராமவாசிகளுடனும் சிநேகமானப் பழகி வந்துள்ளார். எனத் தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகள் வெலிஓயா பிரதேசத்தில் எவரு டனோ பழகுவதாக இதற்கு முன்னர் இராணுவத்தரப்பினருக்குத் தகவல்கள் கிடைத்திருந்தன. கைது செய்யப்பட்ட பின்னர் இவரே அந்நபர் எனத் தெரியவந்துள்ளது. இந்த சந்தேக நபர் தமிழ்ப்பெண் ஒருவரையே மணமுடித்துள்ளார் அவரின் சகோதர சகோதரிகள் விடுதலைப்புலிகளுடன் தொடர்புள்ளவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது. வெலிஓயாவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேச முன்னரங்கில் பணியாற்றுபவர் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாயின் மனைவியின் சகோதரி என்று கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் தேவைக்காகவே இந் நபர் இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இராணுவத் தரப்பு முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். இவர் மூலம் கண்டறியப்பட்ட ஏனையவர்களுக்கும் தொடர்புகள் இருக்கக் கூடும் என்றும் அவர்கள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாவும் அவர் மேலும் கூறியுள்ளார். (கு)

## பேசாலை, பள்ளிமுனை தவிர்ந்த பகுதிகளில் மீன் பிடிக்க அனுமதி!

மன்னார் மாவட்டத்தில் பேசாலை மற்றும் பள்ளிமுனை அகிய பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்றுமுதல் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதில் ஏற்பட்டுள்ள தடைகள் குறித்து ஆராயும் வகையில் நேற்று முன்தினம் மன்னார் கடற்படை முகாமில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றது.

மாவட்ட கடற்படை கட்டளை அதிகாரி குருகுல சூரிய தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் அமைச்சர்களான பீலிக்ஸ் பெரேரா, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, ரிஷாட் பதியுதீன் மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிபர் உட்பட முப்படைகளின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள்.

மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ள பேசாலை, பள்ளிமுனைப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலுக்கான சாதகமான நிலை குறித்து ஆராய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மன்னாரில் இடம்பெற்ற வன் முறைச் சம்பவங்களால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு ஒருவார காலத்திற்கு நிவாரணம் வழங்கவும் அசம்பாவித சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களிற்கு தலா 50 ஆயிரம் ரூபாவை வழங்கவும் இந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-9)

## கருத்தரங்கு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தும் கருத்தரங்குகளை நடத்தவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி வரை இந்தக் கருத்தரங்குகள் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படவுள்ளன.

50 கருத்தரங்குகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்குகளில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பு சீர்குலைவு, வாழ்க்கைச் செலவு உயர்வு, சமாதானப் பேச்சுக்களின் நிலை என்பன இந்தக் கருத்தரங்குகளின் தொனிப் பொருளாக எடுத்துக் கொள்ளப் படவுள்ளதாகவும் அவர் கூறி னார். (க-7)

## வருடாந்த பெருவிழா

(வேலணை)

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் வருடாந்த பெருவிழா ஜூலை மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும், செவ்வாய்க்கிழமை திருக்கல்யாணமும் நடைபெறவுள்ளது. இப் பெருவிழா வின்பூர்வாங்க கிரியைகள் இம் மாதம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு ஆரம்பமாகும். (க-7)

## 100 வயதுக்கு மேற்பட்டவர்களை கௌரவிக்கும் திட்டம் அமுலுக்கு!

(கொழும்பு)

100 வயதைக் கடந்து வாழ்கின்ற இலங்கையின் சிரேஷ்ட பிரஜைகளை இனம் கண்டு அவர்களைக் கௌரவிக்கும் திட்டமொன்று விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய ஆரம்ப நடவடிக்கையாக பிரதேச செயலகம் கணக்கெடுப்பொன்றை ஆரம்பித்துள்ளது.

தங்களது வயதை உறுதிப்படுத்த பிறப்புச் சான்றிதழோ, தேசிய அடையாள அட்டையோ காண்பித்து அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள் மூலம் வயதை உறுதிப்படுத்த முடியுமென அரசாங்க தகவல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 100 வயதைக் கடந்த தங்களது பெற்றோர்களின் விபரங்களை பிள்ளைகள் தங்களது பகுதி கிராமசேவகர் மூலமாக பிரதேச செயலாளருக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-9)

## தென்மராட்சி கிழக்கு மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீருமா?

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கிழக்கு பிரதேசத்திலுள்ள தவசிகுளம், தாவளை, இயற்றாளை, மந்துவில் வடக்கு, விடத்தல்பளை, கெற்பேலி போன்ற கிராமங்களில் வாழ்கின்ற குடும்பங்கள் குடிநீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

இக் கிராமங்களில் இருக்கின்ற கிணறுகளில் சவர்த் தன்மை கொண்ட தண்ணீரே இருப்பதால் அதனைப் பருக முடியாத நிலை காணப்படுகின்றது.

இங்கு நிலவுகின்ற குடிநீர்ப் பிரச்சினை காரணமாக சிறுவர் முதல் பெரியோர் வரை குடிநீரைப் பெறுவதற்கு அன்றாடம் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதுவாக நன்னீர் கிணறுகளையோ அல்லது குழாய்க் கிணறுகளையோ அமைத்துத் தரும்படி கிராமவாசிகள் உள்ளூராட்சி அமைப்பு மற்றும் பிரதேச அமைப்புக்களிடம் கோரிக்கைகள் விட்டிருந்தும் கூட இதுவரை எத்தகைய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என கிராமத்தவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக த்வசிகுளம் கிராமத்தில் மட்டும் இருக்கின்ற 21 பொதுக்கிணறுகளில் அனைத்துக் கிணறுகளுமே சவர்த் தன்மை கொண்ட நீராகவே காணப்படுகின்றது.

அத்துடன் இங்கு குறிப்பிடப்பட்ட கிராமங்களில் இருக்கக் கூடிய சுமார் 50க்கு மேற்பட்ட பொதுக்கிணறுகள் நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பதில் அவற்றினால் கிராமத்தவர்களுக்கு எத்தகைய நன்மையும் கிடைக்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்டிருக்கும் 50க்கும் மேற்பட்ட கிராமசேவையாளர் பிரிவுகளில் குடிநீர்ப் பிரச்சினையானது பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். (க-16)

### தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



ஏதாவது ஒரு பொருளின் மீது பற்றுதல் ஏற்படுவதற்குள் மனதை அதிலிருந்து வேறு ஏதாவது ஓர் உயர்ந்த வழியில் திருப்பி விடவேண்டும் இல்லா விட்டால் அதுவே பிறகு தீர்க்க முடியாத ஒரு பிரச்சினை ஆகிவிடும்.

சுவாமி விவேகானந்தர்

# புலிகளுடன் நேரடிப் பேச்சு நடத்த

# ஜனாதிபதி மகிந்த புதிய வியூகம்

## சண்டேலீடர் தகவல்

(கொழும்பு)

கருணா குழு தாக்குதலை நிறுத்தினால் விடுதலைப்புலிகள், படையினர் மீதான தாக்குதலை நிறுத்தச் சம்மதிப்பார்களா?



என்ற கேள்வியை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ எழுப்பியுள்ளதாக சண்டேலீடர் பத்தி ரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் தன்னைச் சந்தித்த ஊடகத்துறை சார்ந்தவர்களிடம் இக் கேள்வியை ஜனாதிபதி மகிந்த கேட்டுள் ளதாக தெரியவருகின்றது.

இராணுவமும் விடுதலைப்புலிகளும் போரை ஆரம்பிக்கும் நிலையில் உள்ள தால் இதை நிறுத்த ஒரு மாற்று உத்தியை தான் முன்னெடுக்க யோசித்துள்ளதா கவும் தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர் ஒன்று ஆரம்பிக்கும் பட் சத்தில் நாட்டின் பொருளாதாரம் பாதிப் படையலாம் என்றும் அனைத்துச் சமூ கங்களும் இதனால் பாதிப்படைய வாய்ப் புள்ளது என்றும் தெரிவித்ததுடன் நோர் வேயின் அனுசரணையில் தங்கியிருக் காது அவர்களை விலக்கிவிட்டு நேரடிப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது அவசியம் என்றும் கூறியுள்ளார்.

இத்தகைய நேரடிப் பேச்சுவார்த்தை களில் காணப்படும் இணக்கப்பாட்டை அமுல்படுத்த இருவாரங்களுக்கு முயற் சித்துப் பார்த்து அதில் வெற்றிகாணும் பட்சத்தில் அந்த வெற்றியை தொடர்ந்து செயற்படுத்த இருதரப்பும் முயலலாம் என்றும் அவர் விளக்கியுள்ளார்.

இந்த இருவார காலப்பகுதியில் விடு தலைப்புலிகள் மீதோ அல்லது பொது மக்கள் மீதோ கருணா குழுவினர் எதுவித தாக்குதல்களையும் தொடுக்காது இருக்க தான் பொறுப்பெடுக்க முடியும்என்றும் தெரிவித்த ஜனாதிபதி மகிந்த, இத்தகைய இருவார நேரடி போர் நிறுத்தத்திற்கு விடு தலைப்புலிகள் இணக்கம் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்வதா கவும் தெரியவருகின்றது. (ந)

# புளொட் முன்னாள் உறுப்பினர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் புளொட் இயக்கத்தின் முன்னாள் உறுப் பினர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள் ளார்.

வாழைச்சேனைப் புதுக்குடியிருப்பில் நேற்றுப்பிற்பகல் 3 மணியளவில் சுட் டுக் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் மட்டக்களப்பு கோட் டைக்கல்லாறைச் சேர்ந்த வடிவேல் புவ னேந்திரன் (வயது-37) என்று அடையா ளம் காணப்பட்டுள்ளார்.

வெளிநாடு ஒன்றிற்குச் சென்று அண் மையிலேயே இவர் நாடு திரும்பினார் என்று மட்டக்களப்புப் பொலிஸார் தெரி வித்தனர்.

(ந-5)

# இளம்குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடியில் இளம்குடும்பஸ் தர் ஒருவர் நேற்று மாலை இனந்தெரி யாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மகிழூரைச் சேர்ந்த துரைராசா யோக ராசா (வயது-34) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

(ந-5)

# பொதுத் தேர்தலை நடத்துவதா? அமைச்சரவை மறுசீரமைப்பா?

## கருத்துக் கணிப்பு நடத்த அரசு முடிபு

பொதுத் தேர்தல் ஒன்றுக்கு உடனடி யாகச் செல்ல வேண்டுமா? என்பது தொடர்பாக இரகசியக் கருத்துக் கணிப் பொன்றை நடத்துவதற்கு அரசு தீர்மா னித்திருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங் களிலிருந்து தெரியவந்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட தனியார் கருத்துக் கணிப்பு நிறுவனம் ஒன்றின் ஊடாக இந்தக் கணிப்பினை நடத்தி அடுத்த சில வாரங்களுக்குள் முடிபினைக் கண்டறி வதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதன் முடிபுக்கமைய பொதுத் தேர் தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டுமா? இல்லையேல் அமைச்சரவை மறுசீர மைப்பு ஒன்றினை மேற்கொண்டு புதிய பங்காளிகளை அரசாங்கத்தில் இணைத் துக் கொண்டு அரசாங்கத்தை அதிக வலுவுடன் கொண்டு செல்ல வேண்டுமா? என்பது பற்றி மகிந்த ராஜபக்ஷ தீர்மா னிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படு கின்றது.

ஏழு மாதங்களைக் கடந்துள்ள மகிந்த ராஜபக்ஷவின் அரசு பற்றிய மக்களின் கருத்தை அறிவதே அவரின் முக்கிய நோக்கம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வெகுவிரைவில் நடைபெறும் என்று கூறப்பட்டு வந்த அமைச்சரவை மறுசீர மைப்பு நடவடிக்கைகள் இந்த கருத்துக் கணிப்பு முடிபுகள் கிடைக்கும்வரை ஒத்தி வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படு கின்றது.

அண்மையில் மகிந்த ராஜபக்ஷ ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கள் பலரை அழைத்துப் பொதுத் தேர்த லுக்குச் செல்வது பற்றி ஆராய்ந்துள்ளார்.

இதன்போது ஆளும் கட்சி உறுப்பி னர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரி வித்ததையடுத்து இவ்வாறு கருத்துக் கணிப்பு நடத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (ந-5)

**உலகக் கிண்ண உதைபந்தாட்டம்**

# ஈகுவாடரை வென்று இங்கிலாந்து காலிறுதிக்கு

(ஜேர்மனி)

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றின், நேற்று மூன்றாவது போட்டியில் இங்கிலாந்து-ஈகுவாடர் அணிகள் மோதின.

இரு அணிகளும் சமனான போராட் டத்தில் ஆடியபோதும் இங்கிலாந்தின் அணித்தலைவர் பெக்கம் தமக்குக் கிடை த்த பிறி-கிக் வாய்ப்பைப் பயன்படுத்தி ஒரு கோலை போட்டு வெற்றியை உறுதி செய்தார்.

இறுதியில் இங்கிலாந்து 1:0 என்ற கோல் கணக்கில் ஈகுவாடரை வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.(5)

## நோர்வே பணி...

அனுசரணையாளர்களைக் கேட்டிருந்த னர்.

தடையின் பின்னர் ஐரோப்பிய ஒன் றிய கண்காணிப்பாளர்களை புலிகள் வரவேற்கமாட்டார்கள் என்று ஐரோப் பிய ஒன்றியம் நன்கு அறிந்தே இருந்தது.

இலங்கையரசு நோர்வேயின் கேள் விகளுக்கு உடன்பாடான பதிலையே ஆரம்பத்தில் அனுப்பியிருந்தது.

ஆயினும் இப்பொழுது தமது நிலைப் பாட்டை இலங்கையரசாங்கம் மாற்றிக் கொண்டு காண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்களின் மாற்றங்களை நோர் வே ஏற்கக்கூடாது என்று தெரிவித்தி ருக்கின்றது.

இவ்வாறான கொள்கை மாற்றத்தை புலிகள் அவதானித்துக் கொண்டிருக் கின்றனர் என்றும் தமிழ்ச்செல்வன் தெரி வித்தார். (ந-5,6)

# புளொட் உறுப்பினர் சுட்டுக் கொலை



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள தனியார் சைக்கிள் பாது காப்பு நிலையத்தில் கடமையாற்றிவந்த புளெட் உறுப்பினர் ஒருவர் நேற்று பகல் 12.30 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலை வெள்ளைமணல் பிரதேசத்தைச் சேர்ந்தவரும் குருநகரில் வசித்துவரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையுமான இந்துவா முகமட் வசீம் சைமன் (வயது-48) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் இவரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட மேல திக நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் மரண விசாரணைகளின் பின் சடலத்தை உறவினர் களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ந-132,133)

## நோர்வே இல்லாமல்...

புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான எந்தவிதமான பேச்சுவார்த்தையும் நோர் வேயின் அனுசரணையூடாகவே நடை பெறும் என்றும் பேச்சுவார்த்தைக்கான அதிகார பூர்வமான தொடர்பாளராக நோர் வேயையே விடுதலைப்புலிகள் கருது வதாகவும் புலித்தேவன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் சமாதான பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்ட நம்பிக்கையீ னங்களும் தவறான கருத்துக்களுமே இருதரப்புக்கிடையே பல பிரச்சினைகளை ஏற்படுத்தியது.

இதன்காரணமாகவே சர்வதேச மத்தி யஸ்தம் ஏற்படுத்தப்பட்டது. அனுசரணை பணியை மேற்கொண்டுள்ள நோர்வே இருதரப்பையும் சமாதானப் பேச்சுவார்த் தையில் ஈடுபடுத்த பல்வேறு முயற்சிக ளை எடுத்துவருகின்றது.

இதனால் நோர்வேயின் வழியை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த விடு தலைப்புலிகள் விரும்புவதாகவும் புலித் தேவன் தெரிவித்தார்.

இதுபற்றி நோர்வே அரசுக்கு தாம் அறிவித்துவிட்டதாகவும் சந்தேசியவுக்கு வழங்கிய செவ்வியில் அவர் தெரிவித் துள்ளார். (ந-5)

## இன்று முதல்...

தூபியை சேதப்படுத்தி சிதைப்பதும், கைதுகளும், கடத்தல்களும் சுற்றிவ ளைப்புகளும் தீவிரமடைந்து வருவதா லும் தமிழ் மக்களாகிய எமக்கு தாங்க முடியாத வேதனையும் கட்டுக்கடங்காத சினத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனைக் கண்டித்தும் எதிர்ப்புத் தெரி வித்தும் மேற்படி சம்பவங்கள் நிறுத்தப் படும்வரை இன்று திங்கட்கிழமையிலி ருந்து தொடர்ச்சியாக பணிப் புறக்கணிப் பினை மேற்கொள்வ்தாகத் தீர்மானித் துள்ளோம்.

சகல நிறுவனங்களும் அமைப்புக ளும் தங்கள் பரிபூரண ஒத்துழைப்பை வழங்கு மாறு அன்புடன் கேட்டுக் கொள் கின்றோம் என அவ்வமைப்பு வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-5)

## பூநகரி...

படும் எந்தவொரு தாக்குதலுக்கும் முகம் கொடுப்பதற்கு தயாராகவிருப்பதாக யாழ். கட்டளைத் தளபதி ஏ.சந்திரசிறி தெரிவித் துள்ளார் என்றும் அந்த சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (கு)

## ரவுண்ட் அப் '16' சுற்று

**இலங்கை நேரப்படி இன்றைய போட்டிகள்**

| அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|
| இத்தாலி – அவுஸ்திரேலியா | கெய்சர்ஸ்லாடன் | 8.30 (இரவு) |
| சுவிஸ்லாந்து – உக்ரைன் | கலோன் | 12.30 (நள்ளிரவு) |






இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.